சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
வைகாசி 28
றஜப். 4
ஞாயிறு (11-6-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 3
யாழ். தொ.பே. இல. 352
விலை சதம் 60


# தமிழர் விடுதலைக் கூட்டணி அடுத்து தடை செய்யப்படலாம்!

## பாலாதம்பு எச்சரிக்கை!

அரசாங்கம் அண்மையில் கொண்டு வந்து நிறைவேற்றிய தமிழீழ புலிகள் தடைச் சட்டத்தின் கீழ் தமிழர் விடுதலைக் கூட்டணியும் விரைவில் தடை செய்யப்படலாமென இலங்கைவர்த்தக ஊழியர் சங்க பொதுச் செயலாளரும் பிரபல தொழிற் சங்கத் தலைவருமான திரு. பாலாதம்பு அச்சம்தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள வர்த்தக ஊழியர் சங்கமண்டபத்தில் அரசாங்கம் அண்மையில் நிறைவேற்றியுள்ள குற்றவியல் தடுப்பு (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தடைச் சட்டம், ஆகிய இரு சட்டங்களைப் பற்றியும் ஆராயும் கூட்டமொன்று வர்த்தக ஊழியர் சங்கத்தின் சார்பில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இக் கூட்டத்தில் இந்த இரு சட்டங்களாலும் ஏற்படக் கூடிய அபாயங்களைப் பற்றி வர்த்தக ஊழியர்சங்க பொதுச் செயலாளர் திரு. பாலாதம்பு விமர்சனம் செய்து உரையாற்றினர்.

இந்த நாட்டு மக்கள் மீதும், உரிமை கோரி போராடி வரும் தமிழ் மக்கள் மீதும் மேலும் மேலும் அடக்குமுறையைத் திணிப்பதற்கு அரசாங்கம் புதிய சட்டங்களின் மூலம் மேலும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது என்று தமது உரையில் குறிப்பிட்ட திரு. பாலாதம்பு, ஜனநாயக சக்திகளையும் அரசு ஏதேச்சதிகாரமாக நசுக்க முடியும் என்று அச்சம் தெரிவித்தார்.

'விடுதலை' என்ற சொல்லை தனது பெயரில் கொண்டிருந்த ஒரு இயக்கத்தை தடை செய்த அரசாங்கம், அடுத்து அதே சட்டத்தின் கீழ் விரைவில் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் தடைசெய்யக் கூடுமென்று எச்சரிக்கை விடுத்தார் திரு. பாலாதம்பு.

தமிழர் விடுதலைக் கூட்டணியை மட்டுமன்றி, தமிழர்களின் உரிமைப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் ஏனைய இயக்கங்களைக்கூட அரசு தடை செய்யக் கூடும் என்றும் திரு. பாலாதம்பு இக் கூட்டத்தில் தெரிவித்தார்.

## த.வி கூட்டணி கண்டனம்

''தமது வீடுகளில் வாழ்ந்து கொண்டு தமது வழக்கமான வேலைகளைக் கவனித்துக் கொண்டு இருந்த பல தமிழ் இளைஞர்களை, அவர்கள் சட்டத்தின்பிடிக்கு அகப்படாது தப்பியவர்கள் என்ற அடிப்படையில் நியாயமற்ற முறையில் பகிரங்க இடங்களில் அவர்களது படங்களை விளம்பரப்படுத்தி, எவ்வித தெளிவான குற்றச்சாட்டும் இல்லாது இளைஞர்களை கண்டபடி பொலிசார் கைதுசெய்வதை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழு கடுமையாக கண்டித்துள்ளது.

# இனக்கொலையை எதிர்த்து பர்மாவில் முஸ்லிம்கள் ஆயுதமேந்துகின்றனர்?"

## 'லண்டன் ரைம்ஸ்' கேள்வி எழுப்புகிறது!

பர்மாவிலிருந்து பங்களா தேசத்துக்கு அகதிகளாக வந்திருப்போரில் பெரும்பாலும் எல்லோருமே பெண்களாகவும், குழந்தைகளாகவும் காணப்படுவதேன்? அவர்களில் பலர் தங்கள் கணவன்மார் படுகொலை செய்யப்பட்டதாகக் கூறுகிறார்கள். ஏனையவர்கள் கொடுமையை எதிர்த்து ஆயுதமேந்திப் போராடுகிறார்களா?

இவ்வாறான கேள்விகளை உலகப்பிரசித்திபெற்ற ஏடான லண்டன் ரைம்ஸ் எழுப்பியுள்ளது. பர்மாவிலிருந்து பங்களாதேசத்துக்கு வந்து குவியும் அகதிகள் பிரச்சினைபற்றி அப்பத்திரிகை எழுதியுள்ள குறிப்பு ஒன்றிலேயே இக்கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கின்றன.

பர்மாவிலிருந்து பங்களா தேசத்துக்கு தொடர்ந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்டு வருவதுபற்றி வருத்தம் தெரிவித்துள்ள இப்பத்திரிகை, அங்கு நடைபெறும் சம்பவங்கள் சம்பந்தமான பர்மிய விளக்கம் குறித்து சந்தேகம் தெரிவித்துள்ளது.

''இரண்டு இலட்சம் முஸ்லிம்கள் பங்களாதேசத்து

—5-ம் பக்கம் பார்க்க

## தங்கத்துரைக்கு தொடர்ந்து விளக்கமறியல்

மூதூர் முன்னாள் பா. உ. திரு. அ. தங்கத்துரை யூன் 12ம் திகதிவரை விளக்கமறியலில் தொடர்ந்துவைக்கப் பட்டுள்ளார். திரு. தங்கத்துரையின் சார்பில் நீதிமன்றத்தில் தோன்றிய சட்டத்தரணி திரு. இரா. சம்பந்தன், திரு. தங்கத்துரையை பிணையில் விடவேண்டுமென்று வாதாடினர். அரசாங்க வழக்கு தொடுநரிடமிருந்து இதுபற்றி தாம் இப்போது கட்டளைகளை எதிர்பார்த்திருப்பதாக பொலிசார் நீதவானிடம் தெரிவித்தனர். மாவட்ட நீதிபதி, திரு. தங்கத்துரையை யூன் 12ம் திகதி மட்டும் விளக்கமறியலில் வைக்குமாறும், இத்தவணையின் போது பொலிசார் தமது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமென்றும் கட்டளையிட்டார்.



## பர்மாவில் முஸ்லீம் இனக்கொலை!

பேரவையில் தர்மர் கேள்விஎழுப்புவார்!

பௌத்த நாடான பர்மாவில் நடைபெற்று வருவதாகச் சொல்லப்படும் முஸ்லிம் இனக்கொலை பற்றியும், அங்கிருந்து இரண்டு இலட்சம் முஸ்லிம்கள் பங்களாதேசத்துக்கு அகதிகளாக வந்திருப்பதுபற்றியும் தமிழர் விடுதலைக்கூட்டணி தேசிய அரசுப் பேரவையில் கேள்வி எழுப்பி, இலங்கையினதும், உலகினதும் கவனத்தை பரிதாபத்துக்குரிய பர்மிய முஸ்லிம் அகதிகளின் பால் திருப்பவிருக்கிறது. இது சம்பந்தமாக அரசாங்கத்தின் கருத்தை அறிவதற்கு தாம் பேரவையில் கேள்வியெழுப்பவிருப்பதாக மானிப்பாய் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் சுதந்திரனுக்குத் தெரிவித்தார்.

## மொரிஷியஸ் தமிழருக்கு தொண்டாற்ற தமிழ்ப் பெண் துறவியொருவர் தயார்!

மொரிஷியஸ் தீவுக்கு சென்று தமிழ் மொழியையும். சைவமதத்தையும் பரப்புவதற்கும், இத்துறையில் அங்குள்ள மக்களுக்கு தொண்டாற்றுவதற்கும் தாம் சித்தமாக இருப்பதாக ஈழத்து தமிழ்ப் பெண் துறவியொருவர் கிளிநொச்சி குருகுலத்திலிருந்து சுதந்திரனுக்கு எழுதியுள்ளார். சைவத் துறவியொருவரிடம் முறைப்படி தீட்சை பெற்று, துறவறம் பூண்டுள்ள இப்பெண்துறவியார், பாலர் கல்விப்பயிற்சி, சமயம், இலக்கியம் கற்பித்தல் ஆகிய துறைகளில் பயிற்சியும் பெற்றுள்ளார்.

இவரை மொரிஷியஸ் தீவுக்கு அழைத்து பயன்படுத்திக் கொள்வதற்கு மொரிஷியஸ் தீவிலுள்ள பொறுப்பு வாய்ந்த தமிழ், சைவ மன்றங்கள் முன்வந்து, அதுபற்றிய தமது கருத்தை சுதந்திரனுக்கு அனுப்பிவைத்தால், மேற்படி துறவியுடன் அவர்களை தொடர்பு படுத்தி விட சுதந்திரன் மகிழ்ச்சியுடன் தயாராக உள்ளது. —ஆர்

## உளவே!

தேசிய அரசுப்பேரவையில் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோர் ஆற்றிய உரைகள்!

●

தெ. பொ. மீக்கு ஏன் இந்த வேலை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘பொலிசாரின் சட்ட விரோத நடவடிக்கைகளே

# தமிழிளைஞர் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தின!

“பேரவைத்தலைவர் அவர்களே, இந்நாட்டில் கடந்த காலத்தில் தமிழ் இளைஞர்கள் சட்டம், ஒழுங்குக்கு கட்டுப்பட்டு, எப்போதும் அமைதியாக இருந்து வந்துள்ளார்கள் என்பதை நீங்களும் நாங்களும் எல்லோருமே அறிந்திருக்கிறோம். எதுவிதமான வன்முறையிலும் அவர்கள் ஈடுபட்டதில்லை. தமிழ்ப்பிரதேசங்களில் தோன்றிய வன்முறைகளுக்குபின்னணியாக அமைந்த காரணிகள் எவையென்பது பற்றி அறிந்து கொள்ள முயற்சிக்குமாறு கௌரவ உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

1970க்கு பின்னுல் கல்வித் துறையில் தரப்படுத்தல் முறை புகுத்தப்பட்டது. நான் குற்றங்களை இங்கு பங்குபோட முயற்சிக்கவில்லை—ஆனுல் இதன் பின்னணியை ஆராயவே விரும்புகிறேன். முதல் தடவையாக கல்வித்துறையில் மொழிவாரித்தரப்படுத்தல் முறை புகுத்தப்பட்டது. இதன் விளைவாக ஏராளமான தமிழ் மாணவர்களுக்கு பல்கலைக்கழக கதவுகள் அடைக்கப்பட்டன. முதன் முறையாக தமிழ் மாணவர்கள் தமக்குள் ஓர் அமைப்பை ஏற்படுத்துக் கொண்டார்கள். இதை தமிழ் மாணவர் பேரவை என்று அழைத்தனர். வடக்கில் முதன் முறையாக ஆரம்பிக்கப்பட்ட இந்த மாணவர் அமைப்பு கண்டன ஊர்வலங்களை நடத்தியது. அப்போதைய கல்வியமைச்சரின் கொடும்பாவி, ஊர்வலமாகஎடுத்துச் செல்லப்பட்டு பகிரங்கமாகத் தீயிடப்பட்டது.

இதைத்தொடர்ந்து அந்த மாணவர் தலைவர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர். இதன்பின், 1972ம் ஆண்டு குடியரசு அரசியலமைப்பு வந்தபோது, இந்தமாணவர்களும் வேறு இளைஞர்களும் குடியரசு அரசியலமைப்பை கண்டித்து துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கத்தொடங்கினர் அவர்களில் ஏராளமானோர் கைதுசெய்யப்பட்டு அவர்களில் சிலர் பல மாதங்களுக்கு சிறைவைக்கப்பட்டனர்;

இவ்வாறு சிறைவைக்கப்பட்டிருந்த போது தான், தென்னிலங்கையைச் சேர்ந்த பயங்கரவாத சக்திகளுடன் சிறைச்சாலையில் வைத்து தமிழ் இளைஞர்கள் முதன் முறையாக தொடர்பு கொண்டனர்என்ற உண்மை கௌரவ உறுப்பினர்களுக்குத் தெரியுமா? தென்னிலங்கை சிங்களபயங்கரவாத இளைஞர்களுடன் தமிழ் இளைஞர்கள் தொடர்பு கொள்ள வேண்டியேற்பட்ட முதலாவது இடமே சிறைச்சாலை தான். அங்குவைத்துத்தான் அவர்கள் சிங்கள இளைஞர்களுடன் முதல்முதலாக தொடர்பு கொண்டு புதிய கருத்துக்களை பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தனர்.

சில வழிகளுக்கூடாக அரசியல் நடவடிக்கைகளை இயக்கி வந்த நாம், இந்நாட்டின் சிறைச்சாலைகளில் இம்மாதிரியான சூழ்நிலை உருவாகி வருவதாக கேள்விப்பட்டபோது அதிர்ச்சியடைந்தோம். பயங்கரவாதிகள் என்று அழைக்கப்பட்டவர்களும், எமது இளைஞர்களிலே சிலரும் சிறைச்சாலையில் ஒரே அறைக்குள் அடைக்கப்பட்டிருந்தார்கள். அப்போது இந்த இரு பகுதியினரும் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ளவும். கருத்துக்களையும், ஆலோசனைகளையும் தந்திரோபாயங்களையும் ஒருவருக்கொருவர் பறிமாறிக் கொள்ளுகின்ற வாய்ப்பை இச்சிறைச்சாலைச் சந்திப்பே ஏற்படுத்திக் கொடுத்தது. இதன் பின்பே வன்முறைச்சம்பவங்கள் தலைதூக்கத் தொடங்கின.

ஆயினும், எரிகிற நெருப்பில் எண்ணையூற்றியதுபோல இந்த நிலையை மேலும் தூண்டிவிட்ட வேறு சம்பவங்களும் உண்டு. அவை தாம் என்ன? விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட இந்த இளைஞர்கள், நான்காவது மாடிக்கு கொண்டு செல்லப்பட்டு மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதை செய்யப்பட்டார்கள். எனது நண்பரான மானிப்பாய்ப் பிரதிநிதி; கடந்தபாராளுமன்றத்தின் ஆயுட்காலம் முடியுமட்டும் இந்த இளைஞர்களுக்கு செய்யப்பட்டபயங்கரமான மனிதாபிமானமற்ற சித்திரவதைகளைப்பற்றி திருப்பித் திருப்பிக் கேள்வியெழுப்பியதை நாம் அறிவோம்.

ஹரிச்சந்திர கொறியா: முந்திய அரசாங்கத்திலுல்!

அமிர்தலிங்கம்: காவல்துறையினராலும்,முந்திய அரசாங்கத்திலும், அத்தனகல உறுப்பினர்போய் அவர்களை சித்திரவதை செய்தார் என்று நான் கூறவில்லை. ஆனுல் காவல்துறையினரும்

## பொட்டுப்பூச்சிகளாக தமிழ் இளைஞர்கள் அடங்கிக்கிடப்பார்களென்று நீங்கள் எதிர்பார்க்கமுடியாது”

முந்திய அரசாங்கமும் தான் இவ்விதமான சித்திரவதைகளை தமிழ் இளைஞர்களுக்கு இழைத்தவர்கள். அதுமட்டுமல்ல—தமிழ் இளைஞர்களுக்கெதிராக இக்கொடூர சித்திரவதைகளை மேற்கொண்ட சில காவல்துறை அதிகாரிகளின் பெயர்கள் கூட இச்சபையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன; இச்சபையில் அடிக்கடியும் அதிகமாகவும் பேசப்பட்ட ஒரு காவல்துறை அதிகாரியின் பெயர் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை.

ஓர் தமிழ் இளம் பெண் கைதுசெய்யப்பட்டு விசாரணை நடைபெறுகையில் அவளுடைய உடைகளையப்பட்டு தாக்கப்பட்ட மற்றோர் சம்பவமும் நிகழ்ந்திருக்கிறது. அதுபற்றி இச்சபையில் மானிப்பாய்ப் பிரதிநிதி அப்போது பிரச்சினை கிளப்பியிருக்கிறார், இந்த்விசாரணைக்கு பொறுப்பாக இருந்தவர் இன்ஸ்பெக்டர் பத்மநாதன்.

இந்த இளைஞர்கள் மத்தியில் சில குறிப்பிட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராக வெறுப்பு வளர்ந்திருந்தது. அதுதவிர அரசாங்கத்தின் மீது அவர்கள் பிரகடனப்படுத்தப்பட்ட யுத்தம் நடத்துகிருர்கள் என்று கூறுவது தவறுனது, கடந்த சில மாதங்களில் வடக்கில் நடைபெற்ற வன்செயல்களின் பின்னணியை

**தமிழ் ஈழப் புலிகள் தடைச்சட்டமூலத்தின்மீது தேசிய அரசுப்பேரவையில் 18.5.78ல் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆற்றிய உரையின் இரண்டாவதுபகுதி இங்கு இடம்பெறுகிறது.**

இங்குவிளக்கவே நான் முயற்சிக்கிறேன், எனவே இத்தகையசம்பவங்களுக்கு பின்னர் காவல்துறையினரின் கைகளில் சிக்கி கொடும் சித்திரவதைகளை அனுபவித்து அதனுல் பாதிப்புக்குள்ளானவர்கள், தாங்கள் அனுபவித்த கொடுமைக்கு காரணமானவர்களை எதிர்த்து கொதித்தெழுவது இயற்கையானது தான்.

நீங்கள் அறிந்தால் ஆச்சரியப்படுவீர்கள்— விசாரணைக்காக நான்காவது மாடிக்கு கொண்டு செல்லப்பட்ட ஓர் இளைஞனின் தாடிமயிர்கள் ஒவ்வொன்ருக இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையினுல் பிடுங்கியெடுக்கப்பட்டது. இது 1973ம் ஆண்டு நடைபெற்றது.

எச்.பி. அபேரத்தினு:- இச்சபையில் அந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது. அது சம்பந்தமாக என்ன நடவடிக்கையெடுக்கப்பட்டது?

அமிர்:- எதுவுமே நடைபெறவில்லை. அவர்கள் ஆட்சிக் கதிரையில் இருந்தாலென்ன, நீங்கள் அதிகார பீடத்தில் இருந்தாலென்ன —நாம் வாங்கிக்கட்டும் நிலையிலேயே துரதிருஷ்டவசமாக இருந்து கொண்டிருக்கி[illegible] [illegible] தொடர்ந்து அதிகாரத்திலிருக்கிறார்கள். எப்போதும் ஒரேமாதிரியே நடந்து கொள்ளுகிருர்கள்.

அது மட்டும் அல்ல— மற்றோர் இளைஞனின் ஆணுடம்பு மோட்டார் சைக்கிள் ஒன்றின் புகைபோக்கிக்குள் திணிக்கப்பட்டு, இந்தக் குறிப்பிட்ட காவல்துறை அதிகாரி மோட்டார் சைக்கிளை இயக்கினுர். இதன் விளைவாக இந்த இளைஞர் தனது ஆண்மையையே இன்று இழந்து குடும்பவாழ்க்கையே அற்று இருக்கிருர். இம்மாதிரியான கொடிய சித்திரவதைகளே இளைஞர்கள் மீது மேற்கொள்ளப்பட்டன. ஒருவர் இருவர் அல்ல— நூற்றுக்கணக்கானேர் பல ஆண்டுகளாக இவ்விதமான சித்திரவதைகளுக்கு உட்படுத்த பட்டார்கள்,



எங்கள் தலைமுறையைச் சேர்ந்தவர்கள், இப்படியான பிரச்சினைகளில் போனுல் போகட்டுமென்று விட்டுவிடுவது போன்று இக்கால இளைஞர்கள் போனுல் போகட்டுமென்று எதையும் விட்டு விடமாட்டார்கள். இது இயற்கையானது. கௌரவ அமைச்சர் தனது ஆரம்ப உரையிற் கூறியது போன்று, வன்முறைக்கு சார்பான போக்கு உலகடங்கிலுமே இன்று காணப்படுகிறது. இம்மாதிரியான சம்பவங்களால் சினமூட்டப்பட்ட இளைஞர்கள், ஒரு குறிப்பிட்ட முறையில் பதிலடி கொடுத்திருக்கிருர்கள். இதை யார் செய்திருக்கமுடியுமென்ருே, அல்லது எந்தக் குறிப்பிட்ட நபர் செய்திருக்க கூடுமென்ருே நான் இங்கு எதையும் கூறவில்லை. அது எனக்குத் தெரியாது ஆனுல் இந்த பொலீஸ் அதிகாரிகளுக்கு எதிரான விரோத உணர்ச்சி மட்டும் இருந்து வந்திருக்கிறது.

அதுமட்டும் அல்ல— துணை பேரவைத் தலைவர் அவர்களே! 1974ம் ஆண்டு சனவரி மாதம்— இதுவும் இச்சபையில் ஏற்கனவே பேசப்பட்ட ஒருபிரச்சினை—அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அது ஒருஅரசியல்சார்பற்ற இயக்கம் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து— தமிழ்ப் புலவர்களான ரஷியர்கள், ஜெர்மனியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், அமெரிக்கர்கள், இந்தியர்கள்— இப்படி பல நாட்டிலிருந்தும் தமிழ் அறிஞர்கள் தமிழாராய்ச்சி செய்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தனர். 1974 சனவரி 10ம் திகதி— வந்திருந்த வெளிநாட்டு தமிழ் அறிஞர்களுக்கு வழியனுப்புக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது— திருச்சியிலிருந்து வந்திருந்த பேராசிரியர் நயினுமொகம்மது பேசிக்கொண்டிருந்த சமயத்தில்— திடீரென்று எதிர்பாராமல் அங்குவந்தகாவல்துறையினர் திரண்டிருந்த பொதுமக்கள் மீது வன்முறையை கட்டவிழ்த்து விட்டனர். அங்கு பேசிக்கொண்டிருந்த பேராசிரியருக்கு அருகேநான் அமர்ந்திருந்தேன். வெளிநாட்டுப் பேராளர்கள் வீற்றிருந்த மேடையை நோக்கி காவல்துறையினர்கண்ணீர் புகைக்குண்டுகளைவீகிறுர்கள். அவர்கள் அவதிப்பட்டு அங்கும் இங்கும் ஓடநேரிட்டது. காவல்துறையினர் அங்கிருந்த மின்சாரகம்பிகளை சுட்டு வீழ்த்திறுர்கள். அதன் விளைவாக மின்சாரம்தாக்கி ஒன்பது அப்பாவிகள் உயிரிழந்தனர்.

இதற்கு பொறுப்பான காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் விசாரணை நடத்த வேண்டுமென்றும் எங்களுடன் சேர்ந்து உங்கள் கட்சியும் அன்று கோரிக்கை விடுத்தது என்பதை நான் இங்கு மகிழ்வுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

அரசு தரப்பிலிருந்து எதுவுமே நடைபெருத காரணத்தினுல், பொதுமக்கள் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழுவில் இரு முன்னுள் உயர்நீதிமன்ற நீதியரசர்களாகிய திருவாளர்கள் கிறெட்சர். திரு. மாணிக்கவாசகர் ஆகியோரும், பிஷப் குலேந்திரனும் அங்கம்வகித்தனர். அவர்கள் ஓரிடத்தில் கூடி விசாரணை நடத்தி பொதுமக்களிடமிருந்து வாக்குமூலங்களைப்பதிவு செய்தனர். இதன் பெறுபேருக, காவல்துறையினர் மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொண்டதாக அவர்கள் முடிவுக்கு வந்தனர். காவல்துறையினரின் சட்டவிரோத நடவடிக்கையின் விளைவாகத்தான் ஒன்பதுபேர் உயிரிழக்க நேரிட்டது என்று அவர்கள் தீர்ப்பளித்தனர். இச்சம்பவங்

—6ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அடக்குமுறைச் சட்டங்களால் ஒருபோதும் பிரச்சினை தீராது!

## பகத்சிங்கின் பரிசுத்தமான தியாகத்தை அண்ணல் காந்தியே பாராட்டியிருக்கிறார்!

சபாநாயகர் அவர்களே, இச்சட்டமூலத்தின் மீது நேற்று எதிர்க்கட்சி சார்பில் விவாதத்தை தொடக்கி வைத்துப்பேசிய எதிர்க்கட்சி முதல்வர், தமிழர் விடுதலைக் கூட்டணி காந்திய வழியில் அஹிம்சைக் கொள்கையை கடைப்பிடிக்கும் ஓர் இயக்கமென்பதையும், அதுவன்முறையை நிராகரித்துள்ளது என்றும் எதிர்க்கட்சியின் சார்பில் திட்டவட்டமாக எடுத்துரைத்திருந்தார். எதிர்க்கட்சித்தலைவரின் இந்த அறிவிப்பு அதன் முக்கியத்துவம் காரணமாக மீளவும் மீளவும் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தப்படவேண்டிய தொன்றாகும்.

நாங்கள் மனித வாழ்வையும் மனித கௌரவத்தையும் எப்போதும் பெறுமதி மிக்கவையாக மதிப்பவர்களாதலினால், —அப்படி மதிப்பளிக்கின்ற பாரம்பரியமாக எமது பாரம்பரியம் இருக்கின்ற காரணத்தினால்- உயிர்க்கொலை செய்வதை நாம் நிராகரிக்கிறோம். அந்த நிலையிலிருந்து விடுபட்டு, வேறு கோணத்திலிருந்து பார்த்தாலும், தனித்தனியாக நடைபெறும் பலாத்கார நிகழ்ச்சிகளினால், அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாதென்பது எமது நம்பிக்கையும் வரலாறும்எமக்கு காட்டும் உண்மையுமாகும். அரசியல் பிரச்சினைகளுக்கு அரசியலடிப்படையிலேயே தீர்வுகாணப்படவேண்டியது அவசியமாகும். அந்த அடிப்படையில், நாம் ஓர் இயக்கம் என்ற ரீதியில் காந்தீயதத்துவமான அஹிம்சையையும் சட்டமறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். தனிப்பட்ட முறையில் மனித உயிர்களை கொலைசெய்வதை நாம் நிராகரிக்கிறோம்.

இச்சபையிலே இச்சட்டமூலத்தின் அவசியம் குறித்து இங்கு விளக்கமளித்த மூன்று அமைச்சர்களும் சிறிதளவு மாறுபட்ட கருத்துக்களை இங்கு முன்வைத்திருந்தனர்.

நீதியமைச்சர் இச்சட்டமூலத்தை இங்கு சமர்ப்பித்துப்பேசுகையில், வடக்கில் பயங்கரவாதம் நிகழ்கிறதென்றும், பொதுமக்கள் மத்தியிலே பொதுவாக ஏற்பட்டுவிட்ட அச்சத்தின் காரணமாக சில வழக்குகளின் விசாரணைகள் ஸ்தம்பித நிலையை அடைந்துவிட்டதாகவும், ஆகவே இச்சட்டமூலம் அவசியமென்றும் தெரிவித்தார்.

இங்குபேசிய கல்வியமைச்சர், கொலைகளுக்கு பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கூறினார். வெளிவிவகார பதில் அமைச்சர் பேசுகையில், பயங்கரவாதத்தை முறியடிப்பதும், எல்லாவிதமான வன்முறைகளை அடக்குவதுமே இச் சட்டமூலத்தின் நோக்கம் என்றார்.

இவ்வாறு வெவ்வேறுபட்ட நோக்கங்களை அமைச்சர்கள் தங்களது பேச்சுக்களில் தெரிவித்திருந்தாலும் கூட, அவர்கள் எல்லோரும் ஒரேயொரு நோக்கத்தையே நிறைவேற்ற விரும்புகிறார்கள். அது இந்தநாட்டில் வன்முறையை எழும்பவிடாமற் செய்வதுதான். குறிப்பாக அரசியல் வன்முறை நசுக்கப்பட வேண்டியதுதான். அரசியல் துறையிலிருந்தாலென்ன, சமுதாயத் துறையிலிருந்தாலென்ன, ஒரு அரசாங்கம் வன்முறையை அடக்குவதில் கொண்டுள்ள ஆர்வத்தை ஒருவர் புரிந்துகொள்ளமுடியும்.

ஆனால் இச்சட்டமூலத்தின் விதிகள் என்ன கூறுகின்றன? இரண்டாவது விதி பின்வருமாறு கூறுகிறது—

'வேறு ஏதாவது இயக்கம் வன்முறையை நேரடியாக அல்லது மறைமுகமாக தூண்டுவதாக ஜனாதிபதி கருதுவாரானால்—அல்லது நேரடியாகவேனும் மறைமுகமாகவேனும் ஏதாவது சட்டவிரோத நடவடிக்கையில் ஏதாவது ஒரு இயக்கம் ஈடுபட்டிருப்பதாக கருதுவாரானால்—அவர் வர்த்தமானிப் பிரகடனத்தின் மூலம் அத்தகைய இயக்கத்தைதடைசெய்யலாம்''

எனவே, இந்த சட்டமூலத்தின் உள்நோக்கம், அமைச்சர்கள் கூறியதுபோன்று உண்மையில் வன்முறையை கட்டுப்படுத்துவது அல்ல— ஒவ்வொரு சட்டவிரோத நடவடிக்கையையும் கண்காணிப்பதாகும்.

சபாநாயகர் அவர்களே, சட்டமறுப்பு இயக்கம், ஓர் சட்டவிரோத நடவடிக்கையாக இருந்தபோதிலும், அது ஓர் வன்முறை நடவடிக்கை அல்ல; இந்திய தேசிய காங்கிரசின் ஒவ்வொரு நடவடிக்கையுமே சட்டவிரோத நடவடிக்கைகள் தாம். இன்றைய ஜனாதிபதி, அன்று எதிர்க்கட்சித்தலைவராகஇருந்தபோது பத்திரிகை மசோதாவுக்கு எதிராக அன்று மேற்கொண்ட சத்தியாக்கிரகமும் ஓர் சட்டவிரோத நடவடிக்கையே. அத்தனகலையிலும், மற்றும் இடங்களிலும் ஐக்கியதேசியக்கட்சி நடத்திய போராட்டம், சட்ட விரோதமானதுதான் என்றாலும் நிச்சயம் வன்முறை என்று அழைக்கக் கூடியதல்ல—

சபாநாயகர்:- அது எப்படி சட்டவிரோதமாகும்?

எம். சிவா! ஏன் [illegible] பகிரங்க வீதியின் குறுக்கே உட்கார்ந்திருப்பது நிச்சயம் சட்டவிரோதமானது தான்!

சபாநாயகர், ஒழுங்கு! ஒழுங்கு! கௌரவ பிரதமர் அவர்களே, நீங்கள் தெரு வீதியில் உட்கார்ந்திருந்தது சட்டவிரோதம் என்று கௌரவ உறுப்பினர் கருதுகிறார்!

எம். சிவா! ஒருவர் பகிரங்க வீதியில் அமர்ந்து போக்குவரத்தை தடை செய்வது சட்ட விரோதமானது தான்!

ஆர். பிரேமதாசா! இல்லை ஐயா, வாகனங்கள் செல்லக் கூடியதாக நாம் வழிவிட்டுத் தான் இருந்தோம்.

> தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் தடைச் சட்டத்தின்மீது தேசிய அரசுப்பேரவையில் எதிர்க்கட்சித் துணைத்தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபரும் நல்லூர் தொகுதி பா.உ.வுமான திரு ,சிவசிதம்பரம் அவர்கள் 19.5.78ல்ஆற்றிய பேருரை முழுவதும் இங்கு இடம்பெற்றுள்ளது.
>
> —ஆர்

எம். சிவா: அது நீதி மன்றத்தில் ஒரு நல்ல வாதமாக அமையலாம்; ஆனால் அதன் நோக்கம் என்ன?

ஷெல்டன்ஜெயசிங்க! எதிர்ப்பைத தெரிவிப்பதே குறிக்கோள்.

எம். சிவா! அதையேதான் நானும் இங்கு கூறுகிறேன். அதைத்தான் இச்சட்டமூலத்தின் மூலம் நீங்கள் தடுக்க விரும்புகிறீர்கள்?

ஆர். பிரேமதாசா: கண்டி வீதிக்கு குறுக்கே மரங்களை வெட்டிப் போடுவித்து தடைகளை ஏற்படுத்தியது அன்றைய பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா தான்!

எம். சிவா: அவர்களும் சட்ட விரோதமான காரியங்களைச் செய்தார்கள்; நீங்களும் சட்டவிரோதமான காரியங்களையே செய்தீர்கள்!

ஆர். பிரேமதாசா: சில இடங்களில், நாம் மரங்களை அப்புறப்படுத்தினோம்!

எம். சிவா! [illegible] கூறுவது என்னவென்றால், அகிம்சை வழியில் ஒத்துழையாமை இயக்கம் என்னும்போது சட்டத்தை மீறுவதையே குறிப்பிடுகிறேன்.

சபாநாயகர்: சட்டமறுப்பு இயக்கத்துக்கும், சத்தியாக்கிரியைக்கும் வேறுபாடு உண்டு.

எம். சிவா! அவசரகால விதிகள் காரணமாக அந்தச் சொல் மாற்றமடைந்தது எனக்குத் தெரியும்—ஆனால் அதுவல்ல இப்போதுள்ள கேள்வி.

சபாநாயகர்! சத்தியாக்கிரகம் சட்டவிரோதமானது அல்ல; நீங்கள் வீட்டிலிருந்த படியும் அதைச்செய்யலாம்!

எம். சிவா! நீங்கள் வீட்டிலிருந்து சத்தியாக்கிரகம் செய்வது, வேண்டுமானால் உங்கள் மனைவியைக் கொண்டு ஏதாவது செய்யத் தூண்டுவதற்காக இருக்கலாம். ஆனால், பகிரங்க வீதியில் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்யும் போது நீங்கள் சட்டவிரோதமான காரியம் ஒன்றைச் செய்கிறீர்களா இல்லையா?

சபாநாயகர்: மகாத்மாஜி வீட்டிலிருந்தபடியே பட்டினி கிடந்திருக்கிறார்.

ஆர். பிரேமதாசா:- நீங்கள் ஏதாவது செய்யும்போது அதன் விளைவையும் சந்திக்கத்தயாராக இருக்க வேண்டும்.

எம். சிவா!- நிச்சயமாக! நாம் சட்டத்தை மீறும்போது அதன் பலாபலன்களையும் சந்திப்பதற்கு தயாராகவே அப்படிச் செய்வோம். ஆனால், நீங்களோ ஓரடி முன்னால் சென்று, சட்ட மறுப்பிலீடுபடும் இயக்கத்தையே தடை செய்ய சட்டமியற்றுகிறீர்கள்!

ஆர். பிரேமதாசா!- அந்த இயக்கம் வன்முறையை ஆதரிக்குமானால்...!

எம். சிவா!- நான்கூறுவது என்னவென்றால்— நீங்கள் வன்முறையை மட்டும் அடக்க முயலவில்லை. ஒவ்வொரு சட்டவிரோத நடவடிக்கையையும் நசுக்க முயற்சிக்கிறீர்கள். "எவ்வகையாகவேனும், எப்படிப்பட்டதாயினும், மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கையும்'' சட்டவிரோத நடவடிக்கையென்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. எனவே வன்முறை நடவடிக்கை மாத்திரமல்ல— சிறீலங்காவின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு ஊறு தேடக் கூடியது என்று நீங்கள் கருதும் எந்த ஒரு நடவடிக்கையிலும், சிறீலங்காவிலும் சரி, சிறீலங்காவுக்குவெளியேயும் சரி இயங்கும் எந்த ஒரு இயக்கம் எவ்வித நடவடிக்கையில் ஈடுபட்டாலும் அதை தடுக்கக்கூடிய அதிகாரத்தை பெறுகிறீர்கள்— அத்துடன் சிறீலங்காவின் இறைமைக்கும் ஐக்கியத்துக்கும், எல்லையமைப்புக்கும் ஆபத்து விளைவிக்கக்கூடிய அல்லது இவற்றைக் குலைக்கக் கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடும் இயக்கங்களை தடை செய்ய அதிகாரம் பெறுகிறீர்கள்.



ஆர். பிரேமதாசா!- மெத்தச் சரி.

எம். சிவா! நாம் இச்சபைக்கு திட்டவட்டமான மக்கள் ஆணையொன்றுடன் வந்திருக்கிறோம்.

ஷெல்டன்ஜெயசிங்க! "வன்முறைக்கு வழிவகுக்கும் நேரடி நடவடிக்கை'' என்றே அது கூறுகிறது.

எம். சிவா! அப்படி எங்கே கூறப்பட்டிருக்கிறது? 'வேறு எந்த வகையிலாயினும்' என்றே சட்டமூலத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த விதியிலுள்ள சொற்களை விட்டுநாம் ஓடிவிட முடியாது, இச்சட்டமூலத்திலுள்ள விதிகளின் கீழ் தமிழர் விடுதலைக்கூட்டணியை எவ்வளவு சுலபமாக தடை செய்து விடமுடியும் என்று நீங்கள் கற்பனை பண்ணிப் பார்க்கலாம். தொழிற் சங்கங்களைக்கூடத் தடைசெய்ய முடியும். இந்தநாட்டிலுள்ள அத்தனை இயக்கங்களையுமே தடை செய்ய முடியும்—

அதனால்தான் நாம் கூறுகிறோம் — பயங்கரவாதிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பதட்ட நிலைமை

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# தமிழ் இனம் நாடும் ஒரேயொரு திருத்தம்

அரசியலமைப்புக்கு கொண்டு வரப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்து தெரிவுக்குழு உருவாக்கியிருக்கும் பரிந்துரைகள், இந்தவாரம் தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்படுமென்று ஒரு செய்தி கூறுகிறது. ஆயினும். அப்பரிந்துரைகளின் உள்ளடக்கத்தை அரசாங்க சார்பு நாளேடுகள் ஏற்கெனவே வெளியிட்டிருக்கின்றன.

1972ம் ஆண்டு வைகாசி 22ம் திகதி நிறைவேற்றப்பட்ட ஒருதலைப்பட்சமான அரசியலமைப்புக்கே இப்போது திருத்தங்கள் கொண்டுவரப்படுகின்றன. சிங்களத் தேசிய இனத்தினால், சிங்களவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் நிர்ணய சபையில், சிங்களவர்களுக்காக நிறைவேற்றப்பட்டதே 1972ம்ஆண்டின் அரசியலமைப்பாகும். ஒரு சிங்களக்கட்சியான சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசு தயாரித்த அரசியலமைப்புக்கு மற்றோர் சிங்களக் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி அரசு இப்போது சில திருத்தங்களைக் கொண்டு வருகிறது.

1972ம் ஆண்டின் அரசியலமைப்பை நிறைவேற்றிய சிங்கள அரசியல் நிர்ணய சபையில். தமிழ் ஈழத்தேசிய இனம் அங்கம் வகிக்கவில்லை; தமிழ் ஈழத்தேசிய இனத்தின் பிரதிநிதிகள் அந்தச் சபையின் நடவடிக்கைகளிலே பங்கு கொள்ளவில்லை; தமிழ் ஈழத் தேசிய இனத்தின் இணக்கத்தையோ, சம்மதத்தையோ (Consensus) பெற்று அந்த அரசியலமைப்பு உருவாக்கப்படவில்லை; சட்டமாக்கப்படவில்லை. தமிழ் ஈழத்தேசிய இனத்தை தனியே விலத்தி விட்டு, சிங்கள சிறீலங்கா த..க்குரிய அரசியலமைப்பை உருவாக்கிக் கொண்டது: அப்படி உருவாக்கியபோது தமிழ் ஈழத்தையும் தனக்குள் உள்ளடக்கி ஆளும் உரிமையையும் சட்டவிரோதமாக அது அபகரித்துக் கொண்டுவிட்டது.

1972ம் ஆண்டின் அரசியலமைப்பை தயாரிப்பதிலும், உருவாக்குவதிலும், சட்டமாக்குவதிலும் — பங்கு கொள்ளாது, தமது இணக்கத்தை அளிக்காது அதிலிருந்து முற்றாக விலகிக் கொண்ட தமிழ் ஈழத்தேசிய இனம், சட்டவிரோதமாகவும் தமிழ் தேசிய இனத்தின் சம்மதத்தைப் பெறாமலும்; குறித்த அரசியலமைப்பினால் தமிழ் ஈழத்தையும். தமிழ் மக்களையும் வாள் முனையில் பலாத்காரமாக ஆளுவதை எதிர்த்தும், ஆளப்படும் இனம் என்ற நிலையைமாற்றி ஆளும் இனம் என்ற நிலையை அடையவும், தமிழ் ஈழத்தின் இழந்த இறைமையையும், சுதந்திரத்தையும் மீண்டும் நிலைநாட்டவும் உறுதிபூண்டு உழைத்து வருகிறது: 1977 ஆடிப் பொதுத் தேர்தலிலும ஜனநாயக ரீதியில் தமிழ் ஈழத் தேசிய இனம் தனது இந்த அபிலாஷையை திட்டவட்டமாக வெளிப்படுத்தியுள்ளது.

இந்த அடிப்படையிற்தான். தமிழ் ஈழ மக்களுக்கு சிறிதும் தொடர்பில்லாத 1972ம் ஆண்டின் அரசியலமைப்புக்கு இன்றைய அரசு திருத்தங்கள் கொண்டுவரும் நோக்குடன் தெரிவுக்குழுவை நியமித்தபோது அத்தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்க தமிழ் ஈழ விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக்கூட்டணி முற்றாக மறுத்து விட்டது. தமிழ் ஈழ மக்களின் இணக்கத்தைப்பெறாது மூலச்சட்டமே தான்தோன்றித்தனமாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் போது—அடிப்படையில் மாற்றம் ஏதுமின்றி அதற்குக் கொண்டுவரப்பட வேண்டிய ஒரு சில திருத்தங்கள் பற்றி ஆராயும் குழுவில் தமிழர் பிரதிநிதிகள் இடம் பெறுவது வெறும் கேலிக்கூத்தாகும் — தமிழ் தேசிய இனத்தின் அரசியல் இலட்சியத்தையே பின் தள்ளிவிடும் என்ற காரணங்களாலேதான் கூட்டணி அதிலே அங்கம் வகிக்க மறுத்து விட்டது.

சிங்கள சிறீலங்கா தனது அரசியலமைப்பில் என்னதிருத்தங்களையும் கொண்டுவரலாம்; தமிழ் ஈழத்தை தொடர்ந்து தனது ஆட்சிப்பிடிக்குள் வைத்துக் கொண்டிருப்பதற்காக ஏதாவது அற்பசொற்ப சலுகைகளை தமிழ்மக்களுக்கு வழங்குவது போல காட்டிக்கொள்ளலாம் ஒற்றையாட்சி முறை-தனிச்சிங்களச் சட்டம் என்ற இந்த இரு எல்லைக்கோட்டுக்குள் நின்று ஏதாவது கண்துடைப்புக் காட்டலாம். ஆனால் இவற்றாலெல்லாம் தமிழ் ஈழ மக்களின் விடுதலை உணர்வு மங்கி மறைந்து விடப்போவதில்லை; தமிழ் மக்கள் திருப்தியடைந்து விடப்போவதுமில்லை.

தமிழ் ஈழம் சிறிலங்காவிலிருந்து தனியே பிரிந்து சுயராஜ்யத்தை அமைத்துக் கொள்வதற்கு வழிசெய்யக்கூடிய திருத்தம் சிறீலங்காவின் அரசியலமைப்புக்கு கொண்டு வரப்பட்டாலொழிய வேறு எவ்வித திருத்தமும் தமிழினத்துக்கு திருப்தி தரப்போவதில்லை தமிழர் பிரச்சினைக்கு தீர்வாக அமையப்போவதுமில்லை!

அப்படியொரு திருத்தம் ஏற்றுக் கொள்ளப் படும்நாளே இரு தேசிய இனங்களுக்கும் சமத்துவம் பெறும்திருநாளாகும்.

# 'சகல எதிர்க் கட்சிகளையும் தொழிற்சங்கங்களையும் நசுக்கவே புதிய சட்டம்''

## வாசுதேவா கட்சி கண்டனம்!

"அரசாங்கம் தன்னை எதிர்க்கும் எதிர்க்கட்சிக்காரர்களை காலவரையின்றி தடுத்துவைக்கவும், அப்படியான நிறுவனங்களைத் தடைசெய்யவும், சட்டம் இயற்றியுள்ளது. தொழிற்சங்கங்களுக்கும் தொழிலாளர் இயக்கங்களுக்கும் எதிராகவே முக்கியமாக இப்புதிய தமிழீழவிடுதலைப்புலிகள் தடைச் சட்டம் கொண்டுவரப் பட்டுள்ளது."

இவ்வாறு திரு. வாசுதேவ நாணயக்காராவைத் தலைவராகக்கொண்ட சிங்கள நாட்டு இடதுசாரி அரசியற் கட்சிகளிலொன்றான லங்கா சமசமாஜ (இடது) கட்சி விடுத்த அறிக்கை யொன்றில் குறிப்பிட்டுள்ளது. அக் கட்சியின் செயலாளர் திரு. விக்கிரமபாகுவினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கை விபரம் வருமாறு:-

"தமிழ் மக்கள் இந்த முதலாளித்துவ அமைப்பின்கீழ் பல்வேறு சுமைகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். பல்வேறு இயக்கங்கள் அவர்கள் மத்தியில் உருவாக இதுவே காரணமாகும். இந்நிலையில் அரசியல் தீர்வொன்றை காணவேண்டுமே தவிர, அடக்கு முறையைப்பயன்படுத்த கூடாது. இது நிலைமையை மேலும் சிக்கலாக்கி விடும்.

அரசாங்கம் தன்னை எதிர்க்கும் எதிர்க்கட்சிக்காரர்களை காலவரையின்றி தடுத்து வைக்கவும் அப்படியான நிறுவனங்களைத் தடைசெய்யவும் சட்டம் இயற்றியுள்ளது. தொழிற்சங்கங்களுக்கும் தொழிலாளர்களின் இயக்கங்களுக்கும் எதிராகவே முக்கியமாக இப்புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

"நாம் பயங்கரவாத நடவடிக்கைகளை முற்றாக எதிர்க்கிறோம். இந்நடவடிக்கை மூலம் மக்களின் போராட்டத்தை சரியானபாதையில் கொண்டுசெல்ல முடியாது;

புதிய சட்டத்தை நிறைவேற்றிக்கொண்டகையோடு அதனை அமுலாக்க புதிய அமைச்சர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். இதிலிருந்தே ஜே. ஆர். விடுதலைப்புலிகளை விட வேறொரு வேட்டையிலே ஈடுபட்டிருப்பது புரியும.

இந்த அடக்குமுறைக்கு எதிராக பரந்த முறையிலான போராட்டமொன்றை உருவாக்க வேண்டும். பயங்கரவாதத்தையும், வன்முறையையும் நிராகரிக்க வேண்டும். பொதுவேலை நிறுத்தம் ஒன்றை, அதாவது ஹர்த்தால் ஒன்றை உருவாக்கி பரந்த அளவிலான மக்கள் போராட்டத்தை நடத்துவதன் மூலமே அடக்குமுறையை அகற்ற முடியும், இதனைச் செய்ய தொழிற்சங்கங்கள், இடதுசாரி இயக்கங்கள், தமிழ் மக்களின் ஜனநாயக சக்திகள், ஏழைமக்களின் இதர இயக்கங்கள் ஆகியவற்றை ஒன்றுசேர்க்க வேண்டியது அவசியமாகிறது.''

இவ்வாறு கூறும் வாசுதேவா கட்சியின் அறிக்கை 3-6-78 வீரகேசரி இதழில் வெளியிடப்பட்டுள்ளது.எனினும் இந்த அறிக்கை சிங்களப் பத்திரிகைகளில் வெளிவந்திருப்பதாகத் தெரியவில்லை!

## வாழ்க மணமக்கள்!

தமிழ் இளைஞர் பேரவையின் ஊர்காவற்துறைத் தொகுதி அமைப்பாளரும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பேச்சாளரும் சட்டத்தரணியுமானதிரு.எஸ்.கே மகேந்திரன் அவர்களுக்கும் செல்வி. சத்யவதிக்கும் 1-6-78ல் புங்குடுதீவு — இருப்பிட்டியில் திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்தை நடத்திவைத்த ஆசான் நயினை பிரமசிறீ பரமேஸ்வரக் குருக்கள் முன்னிலையில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா. உ. வி. யோகேஸ்வரன் பா. உ. சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவைமகேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்கள் [illegible]

# ருத்ராராஜசிங்கத்தின் எதிர்காலம் என்ன?

அன்று செனிவிரத்தின இன்ஸ்பெக்டர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, சேவையில் அதி மூத்தவரான பிரதிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலான உருத்திரா ராஜசிங்கத்தின் எதிர்காலம் திரிசங்கு சொர்க்க நிலையில் இருப்பதாக அரசாங்கக் கட்சிக்கு ஆதரவான ஆங்கில வார இதழ் "இன்டிப்பென்டன்ற்'' செய்தி குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

"மானம் ஒன்றே பெரிதெனக் கொண்டு வாழ்வது நமது சமுதாயம்'' என்ற முடிவுக்கு திரு. உருத்திரா ராஜசிங்கம் வருவாராகில், இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி உயர்வில் தமிழர் என்ற ஒரே காரணத்துக்காக தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு ஆட்சேபம் தெரிவிக்கு முகமாக ஒன்றில் அவர் தமது பதவியைத் துறக்கக்கூடும், அல்லது இளைப்பாறக்கூடும் என்பதே "இன்டிபென்டன்ற்'' வெளியிட்ட செய்தியின் சூட்சுமமாக இருத்தல் வேண்டும்!

ஐயோ சமத்துவமே! ஜே.ஆர் இன் (அ)தர்மிஷ்ட ஆட்சியில் சமத்துவத்தின் மதிப்பு இம்மட்டா?

## மருத்துவமனையில் துரைராசசிங்கம்

யாழ்மாநகரசபை முன்னாள் உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணி நல்லூர்க்கிளை பிரமுகரும், தொழிற்சங்கத் தலைவருமான திரு. ஆ. துரைராசசிங்கம், பாம்பு தீண்டி யாழ் மருத்துவமனையில் 14ம் வார்டில் இப்போது சிகிச்சை பெற்றுவருகிறார்.

இப்போது விற்பனையாகிறது!

**பாராளுமன்றத்தில் பெரியவர்**

(தொடர்—1)
விலை ரூபா ஒன்று

கிடைக்குமிடம்:

சுதந்திரன் வெளியீட்டகம்,
194ஏ; பண்டாரநாயக வீதி,
கொழும்பு-12.

## சுதந்திரன் சந்தா

ஓராண்டுச் சந்தா ரூ. 50.00
அரை ஆண்டு ,, ரூ. 25,00

பணம் அனுப்பவேண்டிய முகவரி:-

"சுதந்திரன்''
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதிப் பட்டம் கண்ணை மறைத்ததா?

## தெ. பொ. மீ.க்கு ஏன் இந்த வேலை?

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின்பேரில்— கல்வியமைச்சர் திரு. நிசங்காவிஜயரத்தினவின் அழைப்பின் பேரில்— இலங்கை வந்துள்ள மதுரைப் பல்கலைக்கழகத்தின் முன்னுள் துணைவேந்தர் பெரியவர் தெ.பொ. மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள், தியானம், கல்வி சம்பந்தமான 'தத்துவ' உரைகளுடன் நிறுத்திக்கொண்டு, இலங்கைப் பல்கலைக்கழகம் கொடுத்த கலாநிதிபட்டத்தையும் சுமந்து கொண்டு பேசாமற் போயிருப்பாராளுல் அவருக்கும் எமக்கும் எந்தப் பிரச்சினையும் ஏற்பட்டிராது.

ஆனுல், அவரோ தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ளாது, தமக்குத்தேவையற்ற அரசியல் பிரச்சினைகளில் காலைவைத்து, தமிழனின் இனவிடுதலை உணர்ச்சிகளுடன் விளையாடிப்பார்த்திருக்கிருர். எக்காரணம் கொண்டும் இலங்கை பிரியக்கூடாதென்றும் அதற்கு தமிழ் சிங்கள மக்கள் இடமளிக்கக் கூடாதென்றும், மும் மொழித்திட்டமே பிரச்சினைகளுக்கு நிவாரணம் என்றும், வரலாறு தெரியாமல், யதார்த்த நிலை புரியாமல், தம்மை அழைத்தோரைத் திருப்திப் படுத்தி "செஞ்சோற்றுக்கடன் கழிக்கும்" தோரணையில் பேசியிருக்கிருர் தெ. பொ. மீனுட்சி சுந்தரம்பிள்ளை.

திரு. தெ பொ. மீ. அவர்களை கல்வியமைச்சர் நிசங்கா விஜயரத்தின அவர்கள் இங்கு அழைத்தபோதே நாம் சந்தேகப்பட்டோம்— சோழியன் குடுமி சும்மா ஆடாது; ஏதோ நோக்கத்துடன்தான் தெ. பொ. மீயை கல்வியமைச்சர் இங்கு அழைத்திருக்கிருர் என்று ஐயப்பட்டோம். நமது ஐயம் இப்போது உண்மையாகிவிட்டது.

தமிழர்களின் சுதந்திரக் கோரிக்கைக்கு — தமிழ்ஈழப் பிரிவினைக்கு—எதிராக கருத்துத்தெரிவிக்கவும், மும்மொழித்திட்டம் என்ற போர்வையில் சிங்களத் திணிப்புக்கு சிபார்சு செய்யவுமே, சாடிக்கு ஏற்ற மூடியாக தேடிப்பார்த்து தெ. பொ. மீயை கல்வியமைச்சர் விஜயரத்தின தமிழ் நாட்டிலிருந்து கொண்டுவந்து இங்கு இறக்கியிருக்கிருர். இதற்குப் பரிசாக தெ.பொ. மீ. அவர்களுக்கு கலாநிதிப் பட்டமும் கிடைத்திருக்கிறது.

திரு. தெ. பொ. மீ. அவர்கள் ஓர் உயர்ந்த அறிஞராக இருக்கலாம்; நிறைந்தபட்டங்கள் பெற்றவராக இருக்கலாம்; ஆனுல் தமிழகத்தில் தமிழின உணர்வுக்கு— மாறுபட்டவராகவே திரு. தெ.பொ.மீ. தமிழகத்தில் கருதப்படுபவர் என்பதை நாம் அறிவோம். மறைமலை அடிகளார் தலைமையில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்துக்கு எதிராகச் செயற்பட்ட வையாபுரிப்பிள்ளையின் தொண்டரடிப்பொடி ஆழ்வார் இந்தத் தெ.பொ. மீ. என்பது எங்களுக்குத் தெரியும்.

தமிழகத்தில் தமிழக அறிஞர்களாலேயே ஏற்றுக் கொள்ளப்படாத— தமிழ் இன எழுச்சியாளர்களால் பிற்போக்குவாதி, என்று ஒதுக்கப்பட்ட— தெ.பொ. மீ. யைத்தான், இங்கு இறக்குமதி செய்து தமிழின விடுதலை உணர்வையும், மும்மொழித்திட்டத்தின் பின்னணியில் வரும் சிங்களத் திணிப்புக்கு எதிராக தமிழர்கள் கொண்டுள்ள ஒருமித்த அபிப்பிராயத்தையும் முறியடிக்க முயற்சி செய்யப்படுகிறது.

தெ.பொ.மீ அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகம் கொடுத்த கலாநிதிப்பட்டத்தை வாங்கிக் கொண்டு பேசாமற் போயிருக்கலாம்— ஆனுல் செஞ்சோற்றுக்கடன் கழிப்பதற்காக ஈழத் தமிழனின் உணர்ச்சிகளோடு விளையாடிப் பார்த்திருக்கிருர்.

எக்காரணம் கொண்டும் இலங்கை பிரிவதற்கு அனுமதிக்கக் கூடாதென்று 'இதோபதேசம்' செய்திருக்கும் தெ.பொ.மீயை பார்த்துக் கேட்கிறேம்—

"இலங்கையின் பழைய வரலாறு உமக்குத் தெரியுமா? இலங்கை ஒரே நாடு அல்ல என்பதும் இரண்டு வெவ்வேறு நாடுகளைக் கொண்ட ஒருதீவு என்பதும் உமக்குத் தெரியுமா? இலங்கையில் தமிழ் நாட்டரசும், சிங்கள நாட்டரசும் தனித்தனியாக இயங்கியது உமக்குத் தெரியுமா? 1833ம் ஆண்டுவரை 'இலங்கை' என்ற ஒரே நிர்வாக அமைப்புக்கொண்ட 'ஒரே நாடு' என்ற நிலை இருக்கவில்லையென்பது உமக்குத் தெரியுமா? 1977 பொதுத் தேர்தலில் இந்நாட்டுத் தமிழர்கள் தமிழ் ஈழப்பிரிவினைக்கு ஆதரவாக நூற்றுக்கு எண்பது வீதம் வாக்களித்துள்ளது உமக்குத் தெரியுமா? தமிழினத்தின் தலைவர்— எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களை நீர் சந்திக்கவில்லையா? சந்தித்திருந்தால், அவர் நமது சரித்திரத்தையே எடுத்துக் கூறியிருப்பாரே? சரித்திரம் தெரியாமல் இங்குள்ள நடைமுறை தமிழ் மக்கள் படும் துயரம் போன்றவை தெரியாமல், தமிழனின் மான உணர்வுகளுடன் ஏன் பெரியவரே விளையாடுகிறீர்கள்? ஈழத்தமிழனை ஏன் காட்டிக் கொடுக்கிறீர்கள்? ஒரு கலாநிதிப்பட்டத்துக்காக ஏன் விபீஷணுக மாறுகிறீர்கள்? விஷயம் தெரியாவிட்டால் பேசாமல் இருந்திருக்கலாமே!

தமிழர்கள் சிங்களவர்களுடன் ஒற்றுமையாக வாழ்வதற்கு 25 ஆண்டுக்காலம் முயற்சித்துப்பார்த்து விட்டுத்தான் இன்று தமிழ் ஈழப் பிரிவினை என்ற முடிவான நிலைக்கு வந்திருக்கின்றனர் என்பது உமக்குத் தெரியாதா? ஒற்றுமையாக வாழுவதற்கு தமிழர்கள் முயற்சி செய்த கடந்த 25 ஆண்டுகளில் தமிழனுக்கு கிடைத்தது அடியும், உதையும், கொலையும், கற்பழிப்பும், சொத்துக்கள் கொள்ளையும், அகதி கள்ளத்தோணி என்ற பட்டமும், உரிமை மறுப்பும் தான் என்பது உங்களுக்குத் தெரியுமா? தெரிந்திருந்தால் இவ்வாறு துணிச்சலுடன் பேசியிருக்கமாட்டீர்கள், நிசங்கா விஜயரத்தின போட்ட மாயமந்திரப் பொடியில் சிக்கி, விளக்கமின்றி அலட்டியிருக்க மாட்டீர்கள்! சிங்கள அரசின் தாளத்துக்கு ஆடியிருக்க மாட்டீர்கள்!

மும்மொழித்திட்டம் பற்றியும் பிரலாபித்திருக்கிறீர்கள்! உம்முடைய தமிழ்நாட்டில் விலைபோகாத மும்மொழித்திட்டம் என்ற சரக்கை இங்கு வியாபாரம் பண்ணவா பார்க்கிறீர்கள்?

இந்தியாவில் — குறிப்பாக தமிழ் நாட்டில் மும்மொழித்திட்டத்தை அங்குள்ள தமிழர்கள் நிராகரித்து விட்டார்களே! தமிழ் நாட்டில் தமிழும் ஆங்கிலமும் தானே இருக்கின்றன; இந்தியை விரட்டியடித்து விட்டார்களே தமிழ் மக்கள்! முடியுமானுல்—உமக்குத் திறமையிருந்தால், தமிழ் நாட்டில் முதலில் மும்மொழித் திட்டத்தை செயற்படுத்தி இந்தியை தமிழ் பாடசாலைகளில் கட்டாய பாடமாக படிக்க வையுங்கள் பார்ப்போம்! நீர் அங்கு இந்தியைப்பற்றி வாயே திறக்க முடியாது. திறந்தால், தமிழ் நாட்டில் நடமாடவே உம்மால் முடியாது—அந்தநிலையில், ஈழத் தமிழனுக்கா மும்மொழித் திட்டம் பற்றி 'இதோபதேசம்' செய்கிறீர்? ஈழத் தமிழனுக்கு எந்தெந்த மொழியைப் படிக்கலாம்— எப்போது படிக்கலாம்— எதை எதைப்படிக்கக் கூடாதுஎன்றெல்லாம் நன்கு தெரியும். தமிழ் நாட்டில் விலை போகாத உமது மும்மொழித்திட்டக்கைச்சரக்கு இங்கும் விலை போகாது,

எனவே தெ. பொ. மீ. அவர்களே, தவவு செய்து எதையும் ஆராயாமல் அமைச்சரின் சொற்படி ஆடி, செஞ்சோற்றுக்கடன் கழித்து இலங்கைத் தமிழர்களின் வலிவான பகைமையை மேலும் தேடிக்கொள்ளாது, இத்துடன் உமது இதோபதேசங்களை நிறுத்திக் கொண்டு, எஞ்சியுள்ள கௌரவத்தைக் காப்பாற்றிக்கொண்டு — நீர் இங்கிருந்து சென்று விடுவதே உமக்கும், உம்மை அழைத்தவர்களுக்கும் நல்லது.

யாழ்ப்பாணம் வந்து இப்படியான வெங்காயக்கதைகளை நீர் பேசினுல், அதை இங்குள்ள தமிழுணர்ச்சி கொப்பளிக்கும் விடுதலை ஆர்வம் கொண்ட இளைஞர்கள் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம்!

---

## இனக்கொலை...!

—1-ம் பக்கத்தொடர்

அகதிமுகாம்களுக்கு இதுவரை ஓடிவந்துவிட்டனர்; எனினும் முஸ்லிம்கள் துன்புறுத்தப்படுகிருர்கள் என்பதை பர்மா மறுத்துள்ளது.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களை கண்காணிப்பதற்காக, எல்லையோரங்களில் வசித்து வந்த சிறுபான்மையினரை கணக்கெடுக்கும் வேலை மாத்திரம் தான் நடைபெறுகிறதென்பதே பர்மியக்கருத்தாகக் காணப்படுகிறதென்று கூறும் லண்டன் ரைம்ஸ், அத்தகைய சட்டவிரோத குடியேற்றக்காரர்களின் அந்தஸ்து எதுவாக இருந்த போதிலும், பர்மிய இராணுவத்தின் நடவடிக்கை கண்காணிக்கும் அளவுக்குள் மட்டும் நிற்காது. வெளிப்படையான பாரபட்சமாக அமைந்திருந்தது என்று குறிப்பிடுகிறது:

அனேகமாக எல்லா அகதிகளும் பெண்களாகவும் குழந்தைகளாகவும் காணப்படுவது ஏன் என்று கேட்கும் இப்பத்திரிகை, தங்கள் கணவன்மார் கொல்லப்பட்டுவிட்டதாக பெண் அகதிகள் பலர் கூறுவதாக தெரிவித்துள்ளது. ஏனையோர் துன்புறுத்தலுக்கு எதிராக ஆயுதமேந்தி போராடுகின்றனரா? என்ற கேள்வியுடன் 'லண்டன் ரைம்ஸ்' தனது கட்டுரையை முடித்துள்ளது.

பௌத்த மதத்தினர் பெரும்பான்மையினராக வதியும் நாடு பர்மா. அங்குள்ள சிறுபான்மையினரான முஸ்லிம்கள் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் இந் நேரத்தில் உலக வலம் வரும் ஒரு முஸ்லீம் பெருமகனை எமது வெளிநாட்டு அமைச்சர் எதற்காக வாய்மூடி மௌனியாக இருக்க வேண்டும்? பர்மா முஸ்லீம்களுக்காக உலக மன்றங்களில் குரல் கொடுக்க முடியாவிட்டால் பதவியை உதறிவிட வேண்டாமா என்று முஸ்லீம் சமூகம் கேட்கிறது.

---

## ஒரு வருடம் ஒரு மாதம் ஆகியது!

"தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் கடந்த 20 வருடகாலமாக பெறமுடியாதிருந்த தமிழினத்தின் உரிமைகளை நாம் ஒரு வருடத்தில் பெற்றுக்கொடுப்போம். இதன் பின்னர் அவர்களின் ஏமாற்றுவித்தைக்கு முடிவு ஏற்படும்."

—நீதிமந்திரி கே. டபிள்யூ.தேவநாயகம் (வீரகேசரி 16-5-78)

"அடுத்த ஜூலை மாதத்திற்குப்பின்னர் சிறுபான்மையினரின் சகல பிரச்சினைகளும் தீர்ந்துவிடும். ஜூலைக்குப் பின்னர் கூட்டணியினரின் பகல் வேடம் கலைந்துவிடும்.

—நீதிமந்திரி தேவநாயகம். (வீரகேசரி 6-6-78)

"அரசியலமைப்புத் திருத்தங்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்யத் தவறியிருக்குமானுல், அதற்கு கூட்டணியினரே பொறுப்பு ஏற்கவேண்டும். கொடுக்கத்தயாராக இருந்தவரிடம் இவர்கள் கேட்கத் தவறிவிட்டார்கள்!"

—நீதிமந்திரி தேவநாயகம் (தேசிய அரசுப் பேரவையில் 19-5-78ல் பேசியது)

---


## மெழுகுவர்த்தி

அமரர் டாக்டர் நாகநாதனின் சரித்திரம்

சிலம்புச்செல்வர் ம.பொ.சி, மதிப்புரையுடன்

நூலாசிரியர்: கரிகாலன்

விலை: ரூபா 5-00

கிடைக்குமிடம்;-
சுதந்திரன் அலுவலகம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

---

English For Higher Studies

மூன்று மாதப்பயிற்சி — யாழ் நகரில் நடைபெறும்

This Course (originally designed at Brighton Institute, Colombo) meets the requirements of Accountancy & Banking Students who sit London Examinations

ஆரம்பம்: 14 - 6 - 78

தபாலில் விண்ணப்பிக்கவும்

Muthulingam's English Academy

பலாலி வீதி; திருநெல்வேலி வடக்கு சந்தி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறையை மாத்திரம் அடக்குவதல்ல உங்கள் நோக்கம்
# அஹிம்சை இயக்கத்தையும் தடை செய்யவே முயற்சிக்கிறீர்கள்

—3-ம் பக்கத் தொடர்

யை சமாளிப்பதற்குத் தான் இச்சட்டமூலம் கொண்டுவரப்படுவதாக நீங்கள் சாமர்த்தியமாகக் கூறிக்கொண்டாலும்— தேவை ஏற்படும்போது ஏனைய அரசியல் இயக்கங்களை அழித்து விடக்கூடிய ஆயுதத்தை நீங்கள் உங்கள் கையிலே எடுக்கிறீர்கள்!

ஏதாவது ஒருஇயக்கத்தை தடை செய்ய வேண்டுமென்று இன்றைய ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறப்படுமானால் அதில் அவர் அவசரப்பட்டு முடிவு எடுக்க மாட்டார் என்பதை நாம் அறிவோம். அந்த அளவுக்கு அவரிடம் நமக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆயினும் அவர் யார் தந்த தகவலை ஆதாரமாகக்கொண்டு செயல்படப் போகிறார்? காவல்துறையினர் கொடுக்கும் தகவலையே ஆதாரமாகக்கொள்ளப் போகிறார் ஜனாதிபதி. அங்கே தான் ஆபத்து மண்டிக் கிடக்கிறது.

நேற்றைய தினம் எனது நண்பர் சாவகச்சேரி பிரதிநிதி திரு. நவரத்தினம் காவல்துறையினர் எவ்வளவு தூரம் தவறான தகவல்களைத் தர முடியும் என்பதற்கு உதாரணமாக சுவரொட்டி சம்பவத்தை இங்கு சுட்டிக் காட்டினார். இத்தகைய சுவரொட்டி வெளியிடப்பட்டதன் நோக்கம் என்ன என்பதையிட்டுஅரசாங்கத்தரப்பிலிருந்து யாராவது பதிலளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அரசாங்க ஊழியராக அரசாங்க அலுவலகங்களிலே வேலைபார்ப்போருடைய படங்கள் கூட பொலிசாரின் தேடுதல் சுவரொட்டியிலே இடம் பெற்றிருந்ததை திரு. நவரத்தினம் இங்கு அம்பலப் படுத்தியிருந்தார்.

இதையும் விட இன்னும் ஆர்வத்தைத் தூண்டுகிற சிலசம்பவங்களைநான் இங்கு எடுத்துக்காட்ட முடியும் ஆனால் பெயர்களை நான் குறிப்பிட விருப்பவில்லை— அந்த ஏழைப் பையன் மீண்டும் கைது செய்யப்படக் கூடும் என்றகாரணத்தினால்;

இங்கு இச்சுவரொட்டியிலே காணப்படும் ஓர் இளைஞன், அண்மையில் நடைபெற்ற கொலைகளுக்குப் பின்னர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு பின்னர் விடுதலையும் செய்யப்பட்டவர். அவரது புகைப்படமும் இந்தசுவரொட்டியிலே "தேவைப்படும் நபர்களில்" ஒருவராக இடம்பெற்று, அவரைப் பிடித்து தருபவருக்கு சன்மானமும் வேறு வழங்கப்படுகிறது. எனவே இதிலிருந்து காவல்துறையினர் தரக்கூடிய தகவல்கள் எத்தகையவை என்பதை நீங்கள் கண்டு கொள்ள முடியும் இப்படிப்பட்ட தகவல்களை கொண்டே ஒரு இயக்கத்தை தடைசெய்யும் பிரச்சினையில் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க முடியும்.

காவல்துறையினர் ஒரு திட்டமிட்ட நோக்கத்துடன் இம்மாதிரியான கட்டுக்கதைகளை உருவாக்கக் கூடியவர்கள் என்றும் நாம் ஒருபடி மேலே சென்று கூறமுடியும். ஏனெனில், சன்சோனி ஆணைக்குழு முன் அளிக்கப்பட்ட சாட்சியங்களின்படி, 1977 ஆகஸ்ட் கலவரத்தில் காவல்துறையினர் கொண்டிருந்த கொடிய பங்குபற்றி நாம் இட்டவட்டமாகவும் தெளிவாகவும் அறிய முடிகிறது. எனவே சன்சோனி ஆணைக்குழுவின் முன்னால் என்ன நடைபெறுகிறது என்பதை அறிவதில் நாட்டினதும், அரசாங்கத்தினதும் கவனம் திரும்பாமல் திசை திருப்புவதில் காவல்துறையினர் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நீதியமைச்சர் இதைக் கேட்டுச்சிரிக்கலாம்— ஆனால் இது தான் உண்மை. சன்சோனி ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவரும்போது, அந்த அறிக்கையை பார்ப்பதற்கு நீங்கள் இங்கேயிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இதுதான் நடைபெறுகிறது. தமிழ் அகதிகள் மறுவாழ்வுக்கழகத்தின் பெயர் மீதும் களங்கம் ஏற்படுத்தி, அதையும் இந்த இயக்கத்துடன் சேர்த்து இழுப்பதற்கு காவல்துறையினர் முயற்சிப்பதும் இதற்காகவேதான். 1977 ஆகஸ்ட் கலவரத்தின் போது, தங்கள் உயிரைப் பணயம் வைத்து, ஒவ்வோரிடமாகச் சென்று இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு உதவி செய்த பரித்தியாக உணர்வு கொண்ட ஏராளமான இளைஞர்களை கொண்டு இயங்கி வருவது தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகம்.

அவர்கள் அத்தனைபேரும் பிரபலமானவர்கள். வாழ்க்கையில் மிக உயர்ந்த இடங்களை வகிப்பவர்கள், அப்படிப்பட்டவர்கள் அகதிகளைக் குடியமர்த்தி புனர்வாழ்வு அளிப்பதற்காக காடுகளுக்கு சென்றார்கள். இப்படிப்பட்ட ஒரு இயக்கத்துக்குத்தான் கறைபூசும் நோக்கத்துடன், தேடப்படும் இளைஞர் ஒருவரின் முகவரியை கே. ஸி. நித்தியானந்தா மேல் பார்த்து 17, அல்பிறட்பிளேஸ், கொழும்பு என்று வெளியிட்டிருக்கிறார்கள். நீங்கள் நடவடிக்கை மேற்கொள்வதற்கு காவல்துறையினர் தரும் தகவலையே அடிப்படையாகக் கொள்ளுகிறீர்கள். அதுதான் ஆபத்தானதாகும். இங்கேதான் அரசு நடவடிக்கையிலிறங்கு முன் ஒரு முறைக்கு இருமுறை ஆலோசிக்கவேண்டும்.

சபாநாயகர் அவர்களே, இன்னோர் விஷயமும் உள்ளது. ஓர் ஆலோசனைச்சபை நிறுவப்படவிருக்கிறது. ஓர் இயக்கம் — தடைசெய்யப்பட்ட ஓர் இயக்கம்—இந்த ஆலோசனைச்சபையின் முன்னால் சென்று தனது பிரச்சினையை முன்வைக்க முடியுமா? குடியரசுத்தலைவர் ஒரு கட்டளையைப் பிறப்பிக்கிறார். இந்த ஆலோசனைச் சபை முன்பு ஓர் இயக்கம் சென்று "நீங்கள் தவறான தகவலின் அடிப்படையில் செயற்பட்டுள்ளீர்கள்" என்று எடுத்துக்கூறுவதற்கு வழி ஏதும் இல்லையா? அம்மாதிரியான இயக்கங்களிடமிருந்து வரும் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு ஆலோசனைச் சபைக்கு இச் சட்டம் வசதிசெய்து கொடுக்கிறதா? இதை ஏன் கூறுகிறேன் என்றால், ஆலோசனைச் சபை பற்றிக் கூறும் விதி. தனி நபர் அனுப்பும் விண்ணப்பம்பற்றியே பேசுகிறது. ஓர் இயக்கம் முறையீடு செய்ய முடியுமா இல்லையா என்பது பற்றி எமக்குத் தெரியாது.

இந்தநாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் ஓர் முடிவான உரிமை இருக்க வேண்டும். அதாவது— அவர்களுக்கு எதிராக நீங்கள் நடவடிக்கை எடுக்கும்போது, நீங்கள் எடுத்த நடவடிக்கை தவறானது என்று முறையீடு செய்வதற்கு ஓர் நீதிமன்றம் இருக்கவேண்டும்!

வன்முறைச் செயலுடன் சம்பந்தப்பட்ட விசாரணை தொடர்பான எந்த விஷயமும் பிரசுரிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக— முருங்கன் கொலைச் சம்பவங்கள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட இளைஞர் ஒருவர், தொடர்ந்து ஐந்துநாட்கள்வரை நீதவான் முன்னிலையில் பாரப்படுத்தாது தடுக்கப்பட்டு வைத்திருந்து, அவரை எவ்வளவு மோசமான முறையில் குரூரமாக சித்திரவதை செய்தார்கள் என்பதைப் பற்றி காவலூரர் பா. உ. இங்கு விளக்கமாகக் கூறுவார்.

இச்சட்டமூலம் நிறைவேற்றப்படுமானால்— அந்த இளைஞருக்கு என்ன நடந்தது என்பதுபற்றி எந்தப் பத்திரிகையும் செய்தி வெளியிட முடியாது. அம்மாதிரியான குறைபாடுகள் வெளியே தெரிவதற்கு ஏதாவது ஒரு வழி நிச்சயமாக இருக்கத்தான் வேண்டும். அந்த இளைஞருக்கு என்ன நடந்தது என்பதுபற்றி உலகத்தில் எவருக்கும் எதுவும் தெரியாது. ஆனகாரணத்தினாலேதான், இதிலேயுள்ள சில அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும்.

வாரண்ட் இன்றி ஆட்களை கைது செய்தது, அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்தது. காலவரையின்றி அவர்களை தடுப்புக்காவலில் வைத்தது என்று பல குற்றச்சாட்டுகளை முந்திய அரசுமீதுஇன்றைய அரசு சுமத்திவந்திருக்கிறது. இன்றைய அரசு என்ன செய்கிறது? ஆட்களை கைதுசெய்து எந்த விசாரணை நியாயமுமின்றி அவர்களை தடுப்புக்காவலில் வைக்கும் அதே அதிகாரத்தை உங்கள் அமைச்சரிடம் நீங்கள் கையளிக்கவில்லையா? இம்மாதிரியான விதிகள் இதிலே இடம் பெற்றிருக்க வேண்டியதில்லை— இந்தக் கொலைகாரர்களை கண்டு பிடிப்பதற்காக, இவ்வாறான அதிகாரங்களை அமைச்சரிடம் கையளிப்பது அவசியமானதுதானா என்று நான் உங்களைக் கேடகிறேன். விரல் மடித்து எண்ணக்கூடிய ஒரு சிலருக்கு எதிராக, உங்கள் சம்பூரண விசாரணை இயந்திரமும் இயங்கும் சக்தியற்றுப் போன நிலையில், இம்மாதிரியான அதிகாரங்களை தேட வேண்டியிருப்பது இயலாமையின் வெளிப்பாடா?

சபாநாயகர் அவர்களே, இச்சட்டமூலத்தின் உண்மையான நோக்கம் கொலைகாரர்களைப் பிடிப்பதுதான் என்பதில் எமக்கு நம்பிக்கையில்லை நாம் திருப்தியடையாத காரணத்தினால் தான் இப்பிரச்சினைகளையெல்லாம் நாம் எழுப்புகிறோம்.

சபாநாயகர் அவர்களே, அரசியல் பயங்கரவாதம் என்பது ஏதோ புதியதல்ல காலாதிகாலமாக அரசியல் பயங்கரவாதம்இருந்துகொண்டேவந்திருக்கிறது. எல்லாஅரசியல் இயக்கங்களும் காலத்துக்குக் காலம், அரசியல் பயங்கரவாத நடவடிக்கைகளினால் அடையாளம் குறிக்கப்பட்டு வ திருக்கிறது.

காமினி திசாநாயக: எனவே அரசாங்கம் மென்மையாக இருக்க வேண்டுமென்று கூறுகிறீர்களா?

எம். சிவா: இல்லை; ஆனால் இம்மாதிரியான பிரச்சினைகளை, இம்மாதிரியான சட்டமூலங்களை நிறைவேற்றி அதிகாரத்தை கையிலெடுப்பதன் மூலம் தீர்த்து விடலாம் என்று தயவு செய்து நினைத்துவிடாதீர்கள்!

நேற்றைய தினம் பேசிய எதிர்க்கட்சி முதல்வர், தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் புலி இயக்கத்துக்கும் தொடர்பு இருப்பது போற்காட்ட திட்டமிட்ட முயற்சி நடப்பதாகசுட்டிக்காட்டியிருந்தார்

இந்தியாவின் பிரபல பயங்கரவாதியான பகவத் சிங் தூக்கிலிடப்பட்டபோது, அகிம்சையை ஓர் அரசியல் ஆயுதமாக உலகுக்கு வழங்கிய மேதை சாத்வீக இயக்கத்தின் தந்தை மகாத்மா காந்தியடிகள் பின்வருமாறு கூறியிருந்தார்:

"பகவத் சிங்கும், அவரது தோழர்களும் அதி உச்சமான தியாகத்தை செய்துள்ளார்கள்; சுதந்திரத்தை பெறுவதற்கு எமக்கிருந்த வல்லமையை அது மேலும் அதிகரிக்கச்செய்துவிட்டது."

"அகில இந்தியாவுக்கும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தரும் மூலாதார சக்தியாக விளங்கும் மகோன்னதஆத்மா' என்று கூறினார் பண்டிதர் ஜவகர்லால் நேரு.

மகாத்மாகாந்தியும், ஜவகர்லால் நேருவும் இப்படிக் கூறியபோது, அவர்களையோ, இந்தியதேசிய காங்கிரசையோ, யாரும் பயங்கரவாத இயக்கத்துடன்இணைத்துப்பார்க்க முனைந்தது கிடையாது. பகவத் சிங் எதைச்செய்தானோ, அதை மகாத்மாகாந்தி பகிரங்கமாகப் பாராட்டினார். அப்படிப் பாராட்டியதற்காக பிரிட்டிஷார் கூட மாகாத்மாகாந்தியை பயங்கரவாதிகளுடன் சேர்த்து எண்ணியது கிடையாது. இந்த நாட்டில் மட்டும்தான், எதற்காக நீங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், புலிகளுக்கும் தொடர்புஇருப்பதாகக் கூறி, கூட்டணிமீது மாசு கற்பிக்கமுனைகிறீர்கள்?

ஜீ. வி. புஞ்சிநிலமே:- நாம் அப்படிச் செய்யவில்லை!

எம். சிவா: எனக்குத் தெரியும். ஆனால், இதற்கு முன் இரு சந்தர்ப்பங்களில், இரண்டு உறுப்பினர்கள் அதற்கு முயற்சியெடுத்தார்கள். அதை நாங்கள் மறந்துவிடவில்லை!

பிரேமதாசா: வித்தியாசம் என்னவென்றால், அன்று இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்இருந்தது. அவர்களி சுதந்திரமாக இருக்கவில்லை!

அ. அமிர்: நாங்களும் சுதந்திரமாக இல்லை!

சிவா: அது தர்க்கத்துக்குரிய விடயம். அந்தப் பிரச்சினை மீது நாம் இப்போது விவாதத்தில் இறங்காமலிருப்போம். அரசாங்கத்தினதும் குடியரசுத் தலைவரினதும் அந்தரங்க சுத்தி எப்படியிருந்தாலும், இறுதியாக காவல்துறையினர் கொடுக்கும் தகவல்களை ஆதாரமாகக் கொண்டே எந்த நடவடிக்கையும் எடுக்கப்படும்; எனவே இச்சட்டமூலத்தை, அதன் இப்போதைய அமைப்பில் நாம் முற்றாக எதிர்க்கிறோம்.

---

—2-ம் பக்கத் தொடர்

களையிட்டும் இளைஞர்கள் மத்தியில் கடுமையான உள்ளக் கொதிப்பு காணப்பட்டது.

அதன் பின்னால், இந்தச் சம்பவத்துக்கு பொறுப்பாக விருந்த காவல்துறை அதிகாரி பிரயாணம் செய்த ஜீப் வண்டி மீது உள்ளூரில் செய்யப்பட்ட குண்டு வீசிஅதைத் தகர்க்க முயற்சி நடந்ததாக முதல் தடவையாக குற்றம் சாட்டப்பட்டது. தமிழாராய்ச்சி மாநாட்டில் நடைபெற்றதுபோல, சிங்கள நாட்டில் ஏதாவது சம்பவம் நடைபெற்றிருக்குமானால், மக்கள் அனைவரும் பொங்கியெழுந்து காவல்துறை நிலையத்தை நிர்மூலமாக்கியிருப்பார்கள் என்று என்னுடைய [illegible] கேட்டிருக்கிறேன். ஓர் இலக்கிய மாநாடு நடைபெற்ற வேளையில் காவல்துறையினர் இம்மாதிரி நடந்து கொண்டது உண்மையில் காவல் துறையினர் ஒரு சட்ட விரோத நடவடிக்கையென்றே கூறவேண்டும் இந்தச் சம்பவத்தின் எதிரொலி இளைஞர்களிடையே கேட்டது.

உண்மையில் இதே மாதிரியான சம்பவங்களை இந்திய வரலாற்றில் காண முடியும். 1919ம் ஆண்டு நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றியும், ஜெனரல் றெஜினல்ட் ஈ.எச். டயர் இட்ட குரூரமான கட்டளையையும் நாம் அறிவோம். இதை இந்திய மக்களின் வீரத்துக்கு விடப்பட்ட ஒரு சவாலாக பஞ்சாபி மக்கள் ஏற்றுக் கொண்டதையும், அதன் பிறகு பகவத்சிங் போன்ற இளைஞர்கள்பலாத்கார வழிகளில் இறங்கியதையும் நாம் அறிவோம். உத்தம்சிங் என்ற மற்றோர் இளைஞன் இங்கிலாந்துக்கே நேரடியாக சென்று, பல ஆண்டுகளுக்குப் பின்னர் சேர் மைக்கல் ஒடையரை லண்டனிலேயே வைத்துப் படுகொலை செய்தான்.

இளைஞர்களில் ஒரு பிரிவினர் மத்தியில் எதிரொலித்த பிரதிபலிப்பு அது. இந்த நாட்டின் தமிழ் இளைஞர்கள், அவமதிப்புக்குமேல் அவமதிப்புக்கு உள்ளாக்கப்படும் போது தன்மானமுள்ள ஏனைய மனிதர்கள் அதை எதிர்த்து எவ்வாறு பொங்கியெழுவர்களோ, அவ்வாறு பொங்கியெழாது பொட்டுப் பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய் இருப்பார்கள் என்று நீங்கள் எதிர்பார்க்க முடியாது.

—வளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலமெல்லாம் இயக்கத்துக்காக உழைத்த ஒரு தொண்டர் காலிழந்து இன்று வாடுகிறார்

## சிறீமுருகன் வாழ்வு வளமாக வாரி வழங்குவோம்

இயக்கத்தினால் தனக்கு என்ன இலாபம் என்று கணக்குப் பாராது, தன்னால் இயக்கத்துக்கு என்ன இலாபம் என்று கணக்குப் பார்த்து யார் பணியாற்றுகிறானே அவனே இயக்கத்தின் உண்மையான தொண்டன் என்று கூறுவார் திமுக தலைவர் கலைஞர் மு. கருணாநிதி. கலைஞரின் கூற்றுக்கு இலக்கியமாகத் திகழ்ந்து, தமிழர் விடுதலை இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் முப்பதாண்டுகளுக்குமுன் அது பல்வேறு சோதனைகளைச் சந்தித்த நேரத்தில், இன்னல்கள் பலவற்றை ஏற்று நிமிர்ந்து நின்று, தடைகள் பல உண்டெனினும் தடந்தோர் உண்டு என்று பாவேந்தர் பாரதிதாசன் கூறியதுபோல, எதிர்ப்புக்களையெல்லாம் புறங்கண்டு இயக்கமெனும் பயிரை ஆடுமாடுகள் மேய்ந்துவிடாதபடி, காட்டு யானைகள் அழித்துவிடாதபடி, கண்மூடாது காலமெல்லாம் களத்தில் நின்று பணியாற்றிய பழம்பெரும் தொண்டர் ஒருவர் — மலை கலங்கினாலும் நிலைகலங்கா மனஉறுதிபெற்றவர் இன்றைக்கு கால் இழந்து நடமாட முடியாத நிலையில் இருக்கிறார்.

அவரது பெயர் சிறீமுருகன். விடுதலை இயக்கத்துக்கு பல வீரர்களைத் தந்திட்ட அளவெட்டி அவருடைய சொந்த ஊர்.

இன்றைக்கு இயக்கம் வளர்ந்துவிட்டபின்னர்— இயக்கத்துக்குள் நுழைந்து அதன் பயனைச் சுவைப்பவர்கள் சிலர், சிறீமுருகனா? யார் அது என்று உதட்டைப் பிதுக்கக் கூடும்; ஆச்சரியப்பார்வையை வீசக் கூடும்!

இன்றைக்கு இயக்கத்தின் முன்னணித் தலைவர்களாக விளங்கும் கூட்டணி பா. உக்கள் பலர் சிறீமுருகன் என்ற பெயரையே இப்போதுதான் முதன்முதலாகக் கேள்விப்படவும் கூடும்!

வேலைவாய்ப்புப்படிவங்களுக்காகவும், வேறு சலுகைகளுக்காகவும், ஜே. பி. பட்டத்திற்காகவும் கூட்டணிக்கிளைகளை நிறுவும் இற்றைநாள் 'பிரமுகர்கள்' சிறீமுருகனை அறியமாட்டார்கள்!

உண்மையான ஆர்வத் துடிப்புடன், விடுதலைப் போராட்டம் எனும் பலிபீடத்தில் தம்மையே களபலியாக அர்ப்பணித்து தியாக வீரப் போராட்டங்களை நடத்திவரும் தமிழ் இளைய சமுதாயமும் சிறீமுருகன்போன்ற, இந்த விடுதலை இயக்கத்துக்கு மூலவித்திட்ட பழைய தொண்டர்களை அறிந்திருக்கமாட்டார்கள்!

ஆனால்—

முப்பது ஆண்டுகளுக்கு முன் கல்லெறிக்கும் சொல்லடிக்கும் காடைத்தனங்களுக்கும் மத்தியில் இன்றைய விடுதலை இயக்கத்துக்கு வித்திடப்பட்ட நேரத்தில்—அந்த விடுதலை உணர்வையே அழித்து இயக்கம் வளர முன்பே அதைப் பிடுங்கியெறிந்துவிட மாற்றார் சூழ்ச்சிகள் பலசெய்திட்டவேளையில் —அதையெல்லாம் சமாளித்துநின்று இயக்கத்தை கட்டியெழுப்பியவர்களுக்கு— இயக்கத்தின் ஆரம்பகாலத் தலைவர்களுக்கு 'சிறீமுருகன்' என்றால் யார் என்பது புரியும்!

இன்று தமிழர் விடுதலை இயக்கம் மாபெரும் விருட்சமாகி கிளைவிட்டுப் படர்ந்து பூத்துக்காய்த்து, கனிந்து காணப்படலாம்; மரம்பழுத்துள்ள வேளையில், கனியை உண்பதற்காக பாடுபடாத பறவைகள்பல எங்கிருந்தோ வந்து கூட்டணிக்கிளையில் உட்கார்ந்து சுகானுபோகங்களை அனுபவிக்கலாம்.

ஆனால் இன விடுதலை இயக்கம், தமிழரசுக்கட்சியென்ற பெயரில் 1949ல் முளைவிட்டபோது, முப்பதாண்டுகளுக்கு முன்பு அந்த முளையைக் கட்டிகாத்து, வேலியிட்டு, நீரூற்றி வளர்த்தவர்களில் சிறீமுருகனும் ஒருவர்; முக்கியமானவர்.

1949ம் ஆண்டு தமிழ்ஈழத்தின் கடைசித் தமிழ் மன்னன் சங்கிலி ஆண்டிருந்த சங்கிலித்தோப்பிலிருந்து "தமிழன் நாட்டிலே தமிழன் ஆட்சியை மீண்டும் தழைத்திடச் செய்வோம்" என்னும் இலட்சியமுழக்கோடு நந்திக்கொடிகளை கைகளிலே ஏந்தியபடி வீரத்தமிழர்கூட்டம் கைலாயபிள்ளையார் கோவிலை நோக்கி வீரநடைபோட்டுச்சென்றதல்லவா? அந்த முதலாவது ஊர்வலத்திலே முன்னணியில் கொடியுடன் வந்த பெருமை சிறீமுருகனுக்கு உண்டு. அன்று முதல் இயக்கத்தின் பிரசாரப்பீரங்கியானார்; செயல்வீரர்களில் ஒருவரானார்!

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. நான் அப்போது ஏழாவதோ எட்டாவதோ படிக்கும் மாணவனாக இருந்தேன். 1951, 1952ம் ஆண்டுக்காலகட்டம் அது. சிறீமுருகன் தமிழரசு கூட்டங்களில் தீவிரமாக பிரசாரம் செய்துவந்தார். நான் யாழ்ப்பாணம் வரும்போதெல்லாம் அவருடைய சிறீமுருகன் புத்தகசாலைக்கும் (மனோகரா திரையரங்குக்கு முன்னாலிருந்தது) செல்வது வழக்கம். சிறீமுருகன் புத்தகசாலையே ஒரு கட்சிக்காரியாலயமாக மாறிவிடும். கொள்கைவிளக்கங்கள், அரசியல் விமர்சனங்கள், அங்கு இடம்பெறும். இன்ன இன்ன இடங்களில் கூட்டங்கள் உண்டு, அதற்கு வாரும்தம்பி என்று என்னை அன்பொழுக அழைப்பார் சிறீமுருகன்.

அந்த அளவுக்கு ஒரு புத்தகசாலை அதிபராக இருந்தாலும், தன்னுடைய வியாபாரத்தைவிட, இயக்க வளர்ச்சியிலேயே அக்கறை காட்டி, அதனால் தன் சொந்த வருமானத்தில் பெருநட்டமடைந்தவர் சிறீமுருகன்.

1954ம் ஆண்டு தமிழரசு வாலிப முன்னணியின் ஆண்டு விழாவைமுன்னின்று நடத்திய சிறீமுருகன், அதில் மேடையேற்றிய சங்கிலியன் நாடகம் தமிழனைத் தட்டியெழுப்பியது. இயக்கத்தின் வளர்ச்சிக்காக, "தமிழன், தமிழன் குரல்" போன்ற பத்திரிகைகளை கவிஞர் தில்லைச்சிவனுடன் சேர்ந்து அக்காலத்தில்வெளியிட்டார் சிறீமுருகன்.

ஒருமுறை தமிழரசுக்கட்சி அலுவலக வாசலில் மாற்றுக்கட்சியினர் தாக்குதல் மேற்கொண்டபோது அதை முறியடித்திட எதிர்த்தாக்குதல் நடத்தி, காடைத்தனத்தை காடைத்தனத்தால் முறியடித்த பெருமை சிறீமுருகனுக்கு உண்டு. இதுசம்பந்தமாக நடைபெற்ற வழக்கிலும், நியாயத்துக்காகமோதலில் இறங்கிய சிறீமுருகனுக்கே வெற்றியும் கிடைத்தது.

1956ம் ஆண்டு தனிச்சிங்களக்கொள்கையை எதிர்த்து பல்கலைக்கழகத்தமிழ் மாணவர்களுடன் சேர்ந்த மாபெரும் ஹர்த்தாலும், கண்டனப் பொதுக்கூட்டமும் வெற்றிகரமாக நடத்துவதில் முன்னணிவகித்த சிறீமுருகன், அக்காலகட்டத்தில் தமிழுக்கு சம உரிமை கோரி சாகும்வரை உண்ணாவிரதமிருந்த பயில்வான் இரத்தினம் நோய்வாய்ப்பட்டபோது, பொதுமக்களிடம் நிதிசேர்த்து, தமிழுக்காக தம்முயிர் அர்ப்பணித்திடத் தயாரான உண்ணாவிரதத் தொண்டர் இரத்தினத்துக்கு பொற்கிழி வழங்கினார்.

இவ்வாறு தமிழினத்தின் மேம்பாட்டுக்கும் இயக்க வளர்ச்சிக்கும் ஓய்வின்றி உழைத்த சிறீமுருகன், "தமிழினம் ஏன் தாழ்ந்தது?" என்ற நூலை தாமே எழுதி அக்காலத்தில் (1956ல்) வெளியிட்டு, சிந்தனையற்று சோற்றுலடித்த பிண்டங்களாக கிடந்த தமிழர்களை சிந்திக்கத் தூண்டினார். "சிங்கள மக்களின் சிந்தனைக் குரல்" என்ற பெயரில் கொழும்பு வடக்கு பா. உ. வாக அன்று இருந்த சிறில் ஈ. எஸ். பெரேரா எழுதிய நூலையும் தமிழாக்கிவெளியிட்டு, தமிழினத்தின் சிந்தனையைதட்டியெழுப்பினார்.

இயக்கத்தின் வளர்ச்சிக்கு தன் உடல் பொருள் அனைத்தையும் அர்ப்பணித்து தமிழினத்துக்கு ஒரு காவல் அரணை இயக்கத்தை உருவாக்குவதற்கு தன் உழைப்பை அர்ப்பணித்த சிறீமுருகன், இயக்கம் களத்திலிறங்கி அறப்போராடியபோது ஒதுங்கிக் கொண்டவரோ, ஓடியொழிந்தவரோ அல்லர். 1956ம் ஆண்டு தந்தை செல்வா, அமரர் வன்னியசிங்கம், தளபதி அமிர்தலிங் [illegible] சிங்களம்மட்டும் சட்டத்தை எதிர்த்து கொழும்பு காலி முகத்திடலில் ஆனி ஐந்தில் முதலாவது சத்தியாக்கிரகப் போராட்டத்திலீடுபட்டு, சிங்களக் குண்டர்களின் அடியையும், உதையையும் தாங்கிக்கொண்ட சிறீமுருகன், சிங்கள சிறீ எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு அமரர் வன்னியசிங்கத்துடன் சிறைசெல்லும் பாக்கியமும் பெற்றவர்.



இவ்வாறு சிறீமுருகன் போன்ற தொண்டர்கள் இயக்கத்தை அதன் ஆரம்ப காலத்தில் கட்டிக்காத்து, அதற்கு வியர்வை, கண்ணீர், இரத்தம் என்ற நீர்பாய்ச்சி, உழைப்பு என்ற எருவிட்டு தமிழ்ப் பகைவர்களிடமிருந்து அதைப்பேணிப்பாதுகாத்திராவிட்டால், விடுதலைப்போராட்டக்களங்களை சந்தித்திராவிட்டால், விடுதலை இயக்கம் இன்றைய அளவுக்கு ஒருபோதும் மேம்பாடும் வளர்ச்சியும் அடைந்திருக்க முடியாது.

இத்தகைய பழம்பெருந் தொண்டர் சிறீமுருகன் அவர்கள் இன்று நடமாட முடியாத நிலையில் வீட்டில் முடங்கியிருக்கிறார். காலமெல்லாம் தமிழினத்துக்காக உழைத்த சிறீமுருகன் இன்று கால்சழற்றப்பட்ட நிலையில் வேதனைக்கண்ணீர் வடிக்கிறார். வருவாயற்ற நிலையில், அவரது எதிர்கால வாழ்வு கேள்விக்குறியாகியுள்ளது.

ஆம். இந்த தொண்டரின் துயர் துடைத்திட, அவரது வாழ்வுக்கு வசதிசெய்திட முன்வரவேண்டியது தமிழினத்தின் கடமையாகும்—தமிழர் விடுதலை இயக்க ஆதரவாளர்களின் கடமையாகும்!

சிறீமுருகனின் வாழ்வுக்குதவிட, அவரது எஞ்சிய கால வாழ்வு நிம்மதியாய் அமைந்திட, அன்னாருக்கு உதவிநிதியாக ரூபா 15,000 திரட்டிக் கொடுப்பதென்று இயக்கத்தின் பழைய தொண்டர்கள் பலர், மல்லாகத்திலுள்ள இயக்கத்தின் பழைய தலைவர்களில் ஒருவரான சட்டத்தரணி திரு. சு. நடராசாவின் இல்லத்தில் கூடி முடிவு செய்துள்ளனர். இதற்கென முறையான நிதிக்குழு ஒன்றும், உதவியாளர்களும் இக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

எனவே ஈழத்தமிழினமே! என் இனிய நண்பர்களே! சிறீமுருகன் நிதிக்கு வாரி வழங்குங்கள்! இயக்கத்தின் ஆரம்பகாலத்தொண்டன் ஒருவன் கண்கலங்காமல் வாழ்வதற்கு கைகொடுப்பது நமது கடன்! நமது பொறுப்பு!

தமிழ் சமுதாயம் நன்றியுள்ளது— விசுவாசமுள்ளது என்ற அந்த நம்பிக்கை எனக்கு மெத்தவுண்டு. எனவே மழைக்கரம் நீளட்டும்—தமிழ்க்கரம் வழங்கட்டும்! ஒரு தூய தொண்டனின் வாழ்வு மலரட்டும்!!

—கோவை


## நண்பர்கள் தேவையா



தோழர் - தோழியர்களின் விலாசங்களும், படங்களுடன் நட்புறவு விபரங்களுமடங்கிய தொகுப்புப் பிரதியை தபாலில் பெற்றுக் கொள்ள விண்ணப்பியுங்கள்.

The Penpals Leader,
Chandrothaya International
Borella, Colombo-8.

# "தேசிய ஒற்றுமை என்ற பேச்சுக்கே எனது அகராதியில் இடமில்லை"



## யோகேஸ்வரன் பா. உ. இலட்சிய முழக்கம்!

"எனது அகராதியில் தேசிய ஒற்றுமை, தேசிய ஒருமைப்பாடு, தேச ஐக்கியம், என்ற சொற்களுக்கே இடமில்லை. இலங்கை ஒரே நாடு என்ற கருத்துக்கு நான் உடன்பாடானவன் அல்ல. எனது அகராதியில் காணப்படுவதெல்லாம், பிரிவினை, தனிநாடு, தமிழ் ஈழம், போராட்டம் ஆகிய சொற்களே. தமிழ்ஈழத்தின் சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கு ஒரு மேடையாகவே தேசிய அரசுப் பேரவையை பயன்படுத்துகிறோம் அது முடியாமற்போகுமானால் பேரவை உறுப்பினர் பதவியைத் துறப்பேனே தவிர இலட்சியத்தை விட்டு ஓடமாட்டேன்."

இவ்வாறு யாழ் பா. உ. திரு. வெ. யோகேஸ்வரன் அவர்கள் யாழ் முஸ்லிம் சேவாசங்கத்தின் பகிரங்கக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு அரசாங்கக்கட்சி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களான திரு- ஜி. எம். பிரேமச்சந்திரா (மாவத்தகம) ஜனுப் அபுசாலி (பலாங்கொடை) ஆகியோர் உரையாற்றிய போது ஐக்கிய இலங்கையையும் தேசிய ஒற்றுமையையும் வற்புறுத்தியதுடன் ஒன்றுபட்ட இலங்கைக்காக திரு. யோகேஸ்வரனும் பாடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர்.

இவர்களுக்கு பதிலளிக்கும் முறையிலேயே மேற்கண்டவாறு பேசிய திரு. யோகேஸ்வரன், தமது பேச்சில் மேலும்குறிப்பிட்டதாவது:-

"இலங்கை ஒரே நாடு அல்ல; சிங்கள நாடு, தமிழ் ஈழம் என்ற இரண்டு தேசங்களைக் கொ ட ஒரு நிலப் பரப்பே இலங்கை. சிங்கள ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து தமிழ் ஈழத்தை விடுவிக்கவே நாம் போராடுகிறோம். கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் எமக்கு வாக்களித்தது தமிழ் ஈழத்தை அமைப்பதற்காகவே தவிர, தேசிய ஒற்றுமையையும், ஐக்கிய இலங்கையையும் உருவாக்குவதற்காக அல்ல; எம்மைப் பொறுத்தவரை தேசிய ஒற்றுமையென்பது தமிழ்த் தேசிய இனத்தின் ஒற்றுமையே தவிர, தமிழ்—சிங்கள மக்களின் ஒற்றுமையல்ல...! நாம் ஐக்கிய இலங்கை பற்றி பேசுவது, தமிழ் மக்கள் எமக்குத் தந்த கட்டளையை மீறுவதாகும். நாம் பிரிவினைக்கு போராடவே உறுதிபூண்டுள்ளோம். எனக்கு வாக்களித்த யாழ்ப்பாணத் தொகுதி மக்கள்—முஸ்லீம்கள் உட்பட—பிரிவினைக்காகவே வாக்களித்திருக்கிறார்கள்.

"தமிழ் ஈழப்பிரிவினையே எமது முடிந்த முடிவும் இறுதி இலட்சியமுமாகும். அந்த இலட்சியத்திலிருந்து நாம் இம்மியும் விலகமாட்டோம்."

"தேசிய அரசுப்பேரவை எங்கள் இலட்சியத்தை எடுத்துக் கூறும் ஒரு மேடையாகும். அந்த மேடையை எமது இலட்சியத்துக்காக சரிவரப்பயன்படுத்துவோம். அது முடியவில்லையெனக் கண்டால், பதவியை தூக்கியெறிவோமே தவிர, இலட்சியத்துக்கு துரோகம்செய்ய மாட்டோம். எப்படிப் போராடியும் எமது இலட்சியத்தை வென்றெடுத்தே தீருவோம்! எனது தொகுதியிலுள்ள எமது சகோதரர்களான முஸ்லிம்களுக்கு என்னாலான அத்தனை உதவிகளையும் பாரபட்சமின்றி செய்துவருகிறேன்."

இவ்வாறு திரு. யோகேஸ்வரன் கூறினார்.


கிங்ஸ்லி (கொழும்பு) 3-வது வாரம்

-எஸ். எஸ். ஆர்., தேவிகா நடித்த-

அன்பு எங்கே

வெலிங்டன் (யாழ்நகர்)

சிவாஜி நடித்த—

கைகொடுத்த தெய்வம்

கெப்பிட்டல் பிளாசா

கமலஹாசன், ஆலம்—நடித்த

கே. பாலச்சந்தரின்

மன்மத லீலை

லிடோ (யாழ்நகர்) 3-வது வாரம்

சிவகுமார், ஹிந்தி நடிகை அலகா, ஸ்ரீகாந்த், மனோரமா நடித்த-

மதனமாளிகை (கலர்)

செல்லமகால்

ஏ. வி. எம். ராஜன், வாணிஸ்ரீ நடித்த—

நம்ம வீட்டு லச்சுமி

எதிர்பாருங்கள்

தலிப்பிறவி

6-வது வாரம்

கெயிட்டி [கொட்டாஞ்சேனை]

முத்துராமன், அசோகன், தேங்காய் சீனிவாசன், விஜயகுமார், சந்திரகலா ஆகியோர் நடித்த—

காலங்களில் அவள் வசந்தம்

றீகல் மட்டுநகர் 4-வது வாரம்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

கிரகப்பிரவேசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ. பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் கிலோல் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு